

# كيف تنجو
# من مكائد الشيطان

# எச்சரிக்கை!
# வழிகேடன் அழைக்கின்றான்.

باللغة التاميلية

# எச்சரிக்கை!
# வழிகேடன் அழைக்கின்றான்.

மூலம்
தாருல் வதன்

தமிழில்
முஹம்மத் உனைஸ்

மேற்பார்வை
அப்துல் அஸீஸ் ஷாஜஹான்

ح المكتب التعاوني للدعوة والإرشاد بالشفا ، ١٤٢٤ هـ

**فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر**

دار الوطن ، (الرياض)

كيف تنجو من مكائد الشيطان .- الرياض، ١٤٢٤ هـ

٧٢ ص، ١٢×١٧ سم

ردمك: x ـ ٥٣ ـ ٨٤٣ ـ ٩٩٦٠

(النص باللغة التاميلية)

١ ـ الشياطين والجان ٢ ـ الوعظ والارشاد أ. صلاح الدين، محمد انيس (مترجم) ب. العنوان

ديوي ٢٤٣ ٧٩ / ١٤٢٤

رقم الإيداع : ٧٩ / ١٤٢٤

ردمك : x ـ ٥٣ ـ ٨٤٣ ـ ٩٩٦٠

**حقوق الطبع محفوظة**

١٤٢٤هـ ـ ٢٠٠٣م

بسم الله الرحمن الرحيم

**முன்னுரை.**

எல்லாப்புகழும் எல்லாம் வல்ல நாயன் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும். அவனை மனமாறப் புகழ்ந்து அவனிடமே நாம் மேற்கொள்ளும் காரியங்களில் வெற்றி பெற உதவியையும், தயவையும் வேண்டுகின்றோம். மேலும் நமதுள்ளங்கள் ஏற்படுத்துகின்ற கெடுதிகளை விட்டும், நாம் செய்யக்கூடிய கிரியைகளில் தீயவைகளை விட்டும் நம்மைப் பாதுகாக்குமாறு அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் இவ்வுலகில் யாருக்கெல்லாம் நேர்வழி காட்டுகின்றானோ அவர்களை அவனைத் தவிர வேறு எவராலும் வழிகெடுத்திட முடியாது. மேலும் அவன் யாருக்கு வழிகேட்டை எழுதி வைத்திருக்கின்றானோ அவர்களை அவனைத் தவிர வேறு எவராலும் நேர்வழிப்படுத்திடவும் முடியாது. வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லையென்று சாட்சி கூறுகின்றேன். சாந்தியும், கருணையும் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

மனிதன் பிறந்தது முதல் இறக்கும்வரை அவனுக்கெதிராக ஈடுபட்டு அவனை வழிகெடுத்துக் கொண்டிருக்கும் ஷைத்தான் மனிதனது பகிரங்க விரோதியாவான் என்பதனை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். அவ்வாறு நம்மை வழிகெடுத்து அவனுடன் சேர்த்து நம்மையும் நரகுக்கு அழைத்துச்செல்ல அவன் மேற்கொள்ளும் சூழ்ச்சிகள் எண்ணிலடங்காது. அல்லாஹ் கூறுகின்றான். அவன் (தனக்கு வழிபட்ட) தன் கூட்டத்தாரை அழைப்பதெல்லாம் அவர்கள் கொழுந்து விட்டெரியும் நரகவாசிகளில் ஆகிவிடுவதற்காகவேதான்(35.6).

நம்மை வழிகெடுக்கக் காத்திருக்கும் அவன் எம்முறையிலாவது நமது உள்ளங்களில் சந்தேகம், தீய எண்ணம் போன்ற

வைகளை ஏற்படுத்தி அவைமூலம் அல்லாஹ்வுக்கு மாறு செய்து அவனை நிராகரிக்குமாறு நம்மைத் தூண்டுவான். எப்போது அவனது ஆசை வார்த்தைகளுக்கு நாம் தலைசாய்க்கின்றோமோ அப்போதே அல்லாஹ்வுக்கு மாறு செய்தவர்களாக ஆகிவிடுகின்றோம். அந்நிலைக்கு நம்மை ஆளாக்குகின்ற வரையும் நம்மை வழிகெடுத்துக் கொண்டேயிருப்பான்.

எனவே நமது பகிரங்க விரோதி நம்மை வழிகெடுக்க மேற்கொள்ளும் சூழ்ச்சிகளையும், அதிலிருந்து நாம் நம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்? அதற்குரிய வழிவகைகள் யாது? என்பதனையும், நாம் அவனது சூழ்ச்சிகளிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளும் முகமாக நாம் கட்டாயமாக கடைபிடித்தொழுக வேண்டிய முக்கியமான 21 வழிமுறைகளையும் குர்ஆன் ஹதீஸிலிருந்து தொகுத்து இச்சிற்றேட்டிலே உங்கள் முன் வைத்திருக்கின்றோம்.

இச்சிற்றேட்டின் மூலம் நாம் அனைவரும் படித்து பயன்பெற்று, ஷைத்தானுடைய சூழ்ச்சிகளிலிருந்து நம்மை நாம் பாதுகாத்து அல்லாஹ்வுக்கும், அவனது இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் வழிப்பட்டு நடப்பதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவருக்கும் அருள் புரிவானாக!

ஆசிரியர்.

**இவன்தான் ஷைத்தான்.**

ஷைத்தான் என்பவன் யார்? என்பதைப்பற்றி மார்க்க அறிஞர்கள் கூறும் கருத்துக்களில் சிலதைப் பார்ப்போம். அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறும் போது ஷைத்தான் என்பவன் மனிதர்கள், ஜின்கள், மிருகங்கள் போன்றவர்களில் அல்லாஹ்வின் புறத்தால் இடப்பட்ட வரம்புகளை மீறி நடப்பவர்களையே குறிக்கும் எனக்கூறுகின்றார்கள். மேலும் தபறி (ரஹ்) அவர்கள் கூறுகையில் மனிதன், மிருகம், ஜின், மற்றும் ஏனைய அனைத்துப் படைப்புகளிலுமுள்ளோரில் அல்லாஹ்வின் புறத்தால் இடப்பட்ட வரம்புகளை மீறி நடப்போர்களையே குறிக்கும் எனக் கூறுகின்றார்கள். அல்லாஹ் கூறுகின்றான். மேலும் இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும் மனிதரிலும், ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை விரோதியாக நாம் ஆக்கியிருந்தோம்(6.112).

மேற்கூறப்பட்ட வசனத்தில் அல்லாஹ் நமக்கு ஷைத்தானையும், அவன் வழிவந்தவர்களையும் விலகி நடக்குமாறு எச்சரித்துக் கூறியிருக்கின்றான். அவன் ஜின்னினத்தைச் சார்ந்த நெருப்பால் படைக்கப்பட்ட மிகவும் அருவருக்கத்தக்க படைப்பாகும். குர்ஆன் கூறும் வேறு சில வசனங்களை பார்க்கின்ற போது அந்த ஷைத்தான் அவனைப் படைத்த அல்லாஹ்வுக்கு மாறு செய்து அவனை நிராகரித்திருக்கின்றான். மேலும் மனிதன் அவனை வணங்கி வழிப்பட்டு அவனுக்கு நெருங்கியதோர் அடியானாக ஆகவிடாது, தன்னைப் போன்றே அவனும் அல்லாஹ்வின் கோபத்துக்கும், தண்டனைக்கும் ஆளாக வேண்டும் என்ற நோக்கில் அவனுக்கு மனோ இச்சைகளை அழகுறக் காட்டி அல்லாஹ்வுக்கு மாறுசெய்யத் தூண்டுகின்றான்.

**பகையின் ஆரம்பம்.**

அல்லாஹ் தனது பிரிதிநிதியான ஆதம் (அலை) அவர்களைப் படைத்து தனது வானவர்களான மலக்குகளிடம் இவருக்கு நீங்கள் சிரம்பணியுங்கள் எனப்பணித்தபோது அவனது கட்டளைகளே நமது பணிகள் என்றிருந்த அவ்வானவர்கள்

ஆதம் (அலை) அவர்கள் எதனால் படைக்கப்பட்டிருக்கின் றார் என்ற சிந்தனையே அற்றவர்களாக வல்லோனின் கட்ட ளைக்கு அடிபணியும் முகமாக உடனே சிரம்பணிந்தார்கள். ஆனால் அவர்களுடனிருந்த ஷைத்தானோ, தன்னை விடவும் அந்தஸ்தில் குறைந்த மண்ணினால் படைக்கப்பட்ட இவ ருக்கா நாம் சிரம்பணிய வேண்டும்? எனக்கருதி அக்கட்டளை தன்னைப் படைத்தவனின் கட்டளை என்பதை மறந்து அவ ருக்கு சிரம்பணிய மறுத்துவிட்டான். அதனைப்பற்றி அல்லாஹ் இவ் வாறு கூறுகின்றான். அதற்கு நான் அவரைவிட மேலான வன் (ஏனென்றால்) நீ என்னை நெருப்பால் படைத்தாய். அவ ரையோ களிமண்ணால் படைத்தாய் என்று (இறுமாப்புடன் இப்லீஸாகிய) அவன் கூறினான்(7.12).

அவ்வாறு அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிய மறுத்து நிராகரித்ததினால் அவனை தனது அருளிலிருந்து தூரமாக்கி அவ்விடத்தைவிட்டே துரத்தியடித்தான். அதனைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். அன்றியும் மலக்குளி டம் ஆதமுக்குச் சிரம்பணியுங்கள் என்று நாம் கூறியதை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!). அப்போது இப்லீஸைத்தவிர அவர்கள் (அனைவரும்) சிரம்பணிந்தார்கள். அவன் ஜின் இனத்திலுள்ளவனாக இருந்தான். ஆகவே அவன் தன் இரட்சக னுடைய கட்டளைக்கு மாறுசெய்து விட்டான் (18.50).

மேலும் கூறுகின்றான். இன்னும் ஸுலைமான் (சூனியம் செய்து அல்லாஹ்வை) நிராகரிக்கவில்லை. எனினும் ஷைத் தான்கள்தான் நிராகரித்துக் கொண்டிருந்தனர்(2.102).

மேலும் கூறுகின்றான். இங்கிருந்து நீ வெளியேறிவிடு ஏனெனில் நிச்சயமாக நீ விரட்டப்பட்டவன் என்று (அல்லாஹ் வாகிய) அவன் கூறினான். மேலும் நியாயத்தீர்ப்பு நாள் வரை யில் உன்மீது நிச்சயமாக (என்னுடைய) சாபம் உண்டாவதாக! (என்றும் அல்லாஹ் கூறினான்) (15.34−35).

அல்லாஹ்வின் அருளிலிருந்து விரட்டப்பட்ட ஷைத்தான் தனக்கு இவ்வாறானதோர் நிலை உருவாகக் காரணமாயிருந் தவர் ஆதம்தான் என்பதை உணர ஆரம்பித்தான். அத்துடன் எவன் மூலம் நாம் இந்நிலைக்குத் தள்ளப்பட்டோமோ அவனை யும், அவனது சந்ததியினரையும் இதே நிலைக்கு ஆளாக்க வேண்டுமென வைராக்கியம் கொண்டான். அதற்குரியவாறு தன்னை மறுமைவரை வாழவிடுமாறு அல்லாஹ்விடம் கால அவகாசத்தை வேண்டி நின்றான். அதனைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். ஆதமுடைய மக்களே! நீங்கள் ஷைத்தானை வணங்காதீர்கள்! நிச்சயமாக அவன் உங்களுக் குப் பகிரங்கமான விரோதி என்று நான் உங்களிடம் உறுதி மொழி வாங்கவில்லையா? (36.60).

மேலும் கூறுகின்றான். அ(தற்க)வன் என்னுடைய இரட்ச கனே! (இறந்தோரான) அவர்கள் எழுப்பப்படும் நாள் வரையில் நீ எனக்கு அவகாசமளிப்பாயாக! என்று கூறினான். (அதற்கு அல்லாஹ்) நிச்சயமாக நீ அவகாசம் அளிக்கப்பட்டோரில் இருக் கின்றாய் என்று கூறினான். குறிப்பிட்ட நேரத்தின் நாள்வரை (என்று அல்லாஹ் கூறினான்)(15.36–38).

அதுமட்டுமின்றி மனிதர்களை வழிகெடுப்பதற்கு அவன் எவ்வாறான திட்டங்களையெல்லாம் தீட்டி வைத்திருக்கின்றான் என்பதை எவ்வித அச்சமுமின்றி இறைவனிடம் நேரடியாகவே ஒப்புவித்தான். அல்லாஹ் கூறுகின்றான். அ(தற்க)வன் என்னு டைய இரட்சகனே! நீ என்னை வழிகேட்டில் விட்டு விட்டதன் காரணமாக, பூமியில் (உள்ளவற்றை) நான் நிச்சயமாக அவர்க ளுக்கு அலங்கரித்துக் காண்பித்து, அவர்கள் அனைவரையும் நிச்சயமாக நான் வழிகெடுத்து விடுவேன் என்று கூறினான். அவர்களில் (உன்னால்) தேர்ந்தெடுக்கப்பட்ட உன்(அருள்பெற்ற நல்)லடியார்களைத் தவிர(15.39–40).

அன்பார்ந்த சகோதரர்களே!

மேற்கூறப்பட்டவாறு நம்மை வழிகெடுப்பதற்குரிய சிறந்த திட்டங்களைத் தீட்டி அதனை அல்லாஹ்விடம் ஒப்புவித்து, அதன்பிரகாரம் நம்மை வழிகெடுப்பதாகக் கூறி அவனிடமே சவால்விட்டு வந்திருப்பவன்தான் ஷைத்தான். ஆக அவன் எந்த வழிமுறையிலாவது நம்மை அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறுசெய்ய வைத்து அவனை நிராகரிக்கச் செய்து விடுவான். மாற்று மதங்களிலிருப்பவர்கள் தங்களது மதத்தை விட்டுவிட்டு இத்தூய இஸ்லாத்தின் பிரகாரம் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முன்வருவோரையும் தடுத்து உலகில் எல்லாப் பாகங்களிலும் பிரச்சினைகளை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றான். இவ்வாறு நம்மை வழிகெடுத்துவிட்டு அவன் ஆதம் (அலை) அவர்களுக்கு சிரம்பணியாதது சரி யென்றும், அவன் அல்லாஹ்வுக்கு ஒரு முறைதான் தவறு செய்ததாகவும், ஆதத்தின் சந்ததியினர் ஒரு நாளையில் ஆயிரம் முறை தவறு செய்தார்கள் எனவும் நாளை மறுமையில் அல் லாஹ்விடம் பெருமை பேச இருக்கின்றான்.

ஷைத்தான் தான்செய்தது தவறுதான் என்பதை உணரவோ அதற்காக மனம் வருந்தவோ இல்லை. மாறாக அல்லாஹ் தனக்கு அநீதியிழைத்து விட்டான் எனக்கருதி இன்னும் அதி கதிகமாக அவனுக்கு மாறுசெய்து தன்னைவிட சிறந்தவனில் லையென தற்பெருமையடித்தான். அவனோடு குதர்க்கவாதம் செய்தான். அதனால் உனக்கு என்னிடம் மன்னிப்பே இல்லை எனக்கூறி அவனது அருளிலிருந்து தூக்கி எறிந்துவிட்டான்.

அதற்கு மாற்றமாக ஆதமும், அவரது சந்ததியினரும் ஷைத்தான் விரிக்கும் வலைகளில் விழுந்து தம்மை அழித்துக் கொள்வார்கள் என்பதினால், அவர்கள்மீது கருணை கொண்டு அவர்கள் செய்யும் பாவங்களை அவர்கள் உணர்ந்து, மனம் வருந்தி, பாவமோட்சம் கோரும் காலமெல்லாம் அவர்களது பாவங்களை மன்னிப்பதாகக்கூறி பாவமன்னிப்பின் வாயிலையே

திறந்து வைத்திருக்கின்றான். எனவே தவறிழைத்தவர்கள் அத் தவறையுணர்ந்து அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரும் போது அல்லாஹ் அதனை மன்னித்துவிடுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், யாதொரு மானக்கேடான காரியத்தை அவர்கள் செய்து விட் டால், அல்லது (ஏதும் பாவமிழைத்துத்) தங்களுக்குத் தாங் களே அநீதமிழைத்துக் கொண்டால், (உடனே) அல்லாஹ்வை நினைவு கூர்வார்கள். இன்னும் (அவனிடமே) தங்களுடைய பாவங்களுக்காக மன்னிக்கத் தேடுவார்கள். (அல்லாஹ்வும் அவர் களை மன்னித்து விடுவான்.) அல்லாஹ்வைத்தவிர (இத்தகை யோரின்) குற்றங்களை மன்னிப்பவன் வேறு யார்? அவர்கள் செய்த(தவறான) காரியத்தை(த் தவறென்று) அவர்கள் அறிந்து கொண்டே (அதில்) நிலைத்திருக்கவும் மாட்டார்கள். (உடனே அதிலிருந்து விலகி விடுவார்கள்(3.135).

மேலும் கூறுகின்றான். தங்கள் மீது(தாங்களே)அளவு கடந்து (பாவங்கள் செய்து) விட்டோராகிய என் அடியார்களே! அல்லாஹ்வின் அருளிலிருந்து (அவன் மன்னிப்பை விட்டும்) நிராசையற்றோராக நீங்கள் ஆகிவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் (உங்களுடைய) பாவங்கள் யாவையும் (நீங்கள் பிழை பொறுக்கத் தேடினால்) அவன் மன்னிக்கிறவனும், மிகக் கிருபையுடையவனும் ஆவான் என்று (நபியே!) நீர் கூறு வீராக! இன்னும் (மனிதர்களே!) உங்களுக்கு வேதனை வரு வதற்கு முன்னதாக உங்கள் இரட்சகன்பால் (தவ்பாச் செய்து) நீங்கள் திரும்பிவிடுங்கள். அவனுக்கு (முற்றிலும்) நீங்கள் கீழ்ப்படிந்தும் விடுங்கள். (வேதனை வந்து விட்டால்) பின்னர் (எவராலும்) நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள்(39.53-54).

**வல்லோனின் நற்செய்தி.**

நபி (ஸல்) அவர்கள் கூறிய நற்செய்தியை அபூசயீத் (ரலி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள். ஷைத்தான் அல் லாஹ்வைப் பார்த்து இறைவா! உனதடியார்கள் உயிருடனிருக்

கும் காலமெல்லாம் நான் அவர்களை வழிகெடுத்துக் கொண் டேயிருப்பேன் எனக்கூறினான். அதற்கு அல்லாஹ் எனது கண் ணியத்தினதும், கீர்த்தியினதும் மீது சத்தியமாக அவர்கள் செய்த தவறுகளுக்கு அவர்கள் பாவமோட்சம் கோரும் கால மெல்லாம், நான் அவர்களது தவறுகளை மன்னித்துக் கொண் டேயிருப்பேன் எனக் கூறினான்(அஹ்மத்,ஹாகிம்). எனவே நாம் ஷைத்தானினது சூழ்ச்சிகளிலும், அவன் விரித்திருக்கும் வலை களிலும் வீழ்ந்து விடக்கூடாது. நாம் அவ்வாறு அவனது ஆசைவார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு அல்லாஹ்வுக்கு மாறு செய்து வாழ்ந்தால், நாம் கடைசியில் செல்லவிருக்கும் இடம் நரக நெருப்பாகவேயிருக்கும். எனவே அல்லாஹ்வின் கட்டளை களை ஏற்று நடந்து அதற்கு பிரதியுபகாரமாக அவன் நமக்கு தயார் செய்து வைத்திருக்கும் சுவனத்தை அடைந்து கொள் வதற்குரிய முறையில் இறைவிசுவாசியாக இருந்து கொள்ள வேண்டும்.

**பலவீனமானவன் ஷைத்தான்.**

இன்று அதிகமானோர் தம்மால் ஷைத்தானை எதிர்த்து நிற்கமுடியாதெனவும், தனக்கும் அவனுக்குமிடையில் ஏதாவது நடந்து விட்டால் அவனுக்கிருக்கும் வலிமையினாலும், மக் களை வழிகெடுக்கும் அபார சக்தியினாலும் நம்மை அவனே ஜெயித்து விடுகின்றான் எனவும் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் நாம் சற்று குர்ஆன், ஹதீஸ் பக்கம் நமது கவனத் தைச் செலுத்தும்போது உண்மை அதுவல்ல என்பது புரிகின் றது. அல்லாஹ்வைப் பயந்து அவனது கட்டளைகளுக்கு அடி பணிந்து அவனது தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களது வழிமுறைகளை பின்பற்றி நடக்கும் ஒருவனை ஒருபோதும் அவனால் வழிகெடுக்கவே முடியாது. அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக என்னுடைய அடியார்களாகிய அவர்கள் மீது (ஷைத்தானே!) உனக்கு எவ்வித அதிகாரமுமில்லை (ஆகவே

அவர்களைப்) பொறுப் பேற்றுக்கொள்ள உமதிரட்சகனே போது மானவன்(*17.65*).

மேலும் கூறுகின்றான். நிச்சயமாக என்னுடைய அடியார் களாகிய அவர்கள்மீது உனக்கு யாதொரு அதிகாரமும் இல்லை. (திசைதிருப்பப்பட்டு) வழிகெட்டவர்களிலிருந்து உன் னைப் பின்பற்றியவர்களைத்தவிர(*15.42*).

மேலும் கூறுகின்றான். மேலும், அவர்கள் மீது அவ னுக்கு எவ்வித அதிகாரமும் இருக்கவில்லை. ஆயினும் மறு மையை நம்பாது அவர்களில் சந்தேகத்திலிருப்போரிலிருந்து (மறுமையை) நம்புபவர் எவர் என்பதை நாம் தெளிவாக அறி (வித்து விடு)வதற்காகவே தவிர(*34.21*).

ஷைத்தான் தனது இயலாமையை அறிந்து வைத்திருப்ப துடன் அவன் மனிதர்களை வழிகெடுப்பதாக அல்லாஹ்விடம் சவால்விட்டபோது, அதனைக் சுட்டிக் காட்டியுமிருக்கின்றான். அதைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். அ(தற்க) வன் என்னுடைய இரட்சகனே! நீ என்னை வழிகேட்டில் விட்டு விட்டதன் காரணமாக பூமியில் (உள்ளவற்றை) நான் நிச்சய மாக அவர்களுக்கு அலங்கரித்துக் காண்பித்து அவர்கள் அனைவரையும் நிச்சயமாக நான் வழிகெடுத்து விடுவேன் என்று கூறினான். அவர்களில் (உன்னால்) தேர்ந்தெடுக்கப்பட்ட உன்(அருள் பெற்ற நல்)அடியார்களைத்தவிர(*15.39-40*). மேலும் தனது இயலாமையைப்பற்றி மறுமையில் அவனாகவே தனது கூட்டத்தினரிடம் கூறுவான் என்பதையும் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். நான் உங்களை அழைத்தேன். நீங்கள் எனக்கு பதில் கூறினீர்கள் என்பதைத்தவிர எனக்கு யாதோர் அதிகாரமும் உங்கள்மீது இல்லை. ஆதலால் நீங்கள் என்னை நிந்திக்காதீர் கள். உங்களையே நீங்கள் நிந்தித்துக் கொள்ளுங்கள்(*14.22*).

அல்லாஹ் ஷைத்தானினது இயலாமையைப் பற்றியும், அவ னது சூழ்ச்சிகள் உறுதியற்றவையெனவும் பின்வருமாறு கூறு கின்றான். ஆகவே ஷைத்தானின் நண்பர்களுக்கு எதிராகப் போர்

செய்யுங்கள். நிச்சயமாக ஷைத்தானுடைய சூழ்ச்சி மிகவும் பல வீனமானதாக இருக்கின்றது(4.76).

**யாரிடம் ஷைத்தான் வலிமைமிக்கவன்?**

ஷைத்தான் இறைவிசுவாசிக்கு பலவீனமானவனாக இருந்த போதிலும், இறைவனுக்கு மாறுசெய்பவர்களிடம் வலிமைமிக்கவ னாக காணப்படுகின்றான். ஒருவன் இறைவனுக்கு மாறுசெய்ய முற்படும் போது அவன் ஷைத்தானுக்கு வழிப்படுகின்றான். அவ்வாறு வழிப்படுவதன் மூலம் இவனை மென்மேலும் வழி கெடுத்து அழித்து விடுவதற்குரிய பாதையை அவனுக்கு திறந்து கொடுக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். அவனு டைய அதிகாரமெல்லாம் அவனை நண்பராக எடுத்துக் கொள் கிறார்களே அத்தகையவர்கள் மீதும், அவனால் இணைவைக் கக் கூடியவர்களாக இருக்கிறார்களே அத்தகையவர்களின் மீதும்தான்(16.100).

மேற்கூறப்பட்டவாறு யாரெல்லாம் ஷைத்தானுடைய சூழ்ச்சி களுக்கு கட்டுப்பட்டவர்களாக தமது வாழ்க்கையை அமைத் துக் கொள்கின்றார்களோ, அவர்களுக்குரிய தண்டனையாக அல்லாஹ் அவர்களை அதிலே மதிமயங்கச் செய்து மென் மேலும் அதிலே ஈடுபட வைக்கின்றான். மாறாக மனிதன் ஷைத் தானுக்கு வழிப்படாதபோது அவனால் அம்மனிதனை வழி கெடுக்க முடியாதவாறு அல்லாஹ் அவனை பாதுகாக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். (நபியே!) நிராகரிப்போரை (தீயவைக ளைச் செய்யுமாறு) தூண்டிக் கொண்டிருப்பதற்காகவே ஷைத் தான்களை நாம்(அவர்களிடம்)அனுப்பியிருக்கின்றோம் என்பதை நீர் பார்க்கவில்லையா?(19.83).

**எச்சரிக்கை!**

மேலும் ஷைத்தானுக்கு வழிப்படுவோர் அறிந்து கொள்ளும் பொருட்டு அவன் மேற்கொள்ளும் சில தீயவைகளை அல்லாஹ் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றான். மனிதர்களே! பூமியிலுள்ள வற்றிலிருந்து (உண்ண)அனுமதிக்கப்பட்ட நல்லவற்றை உண்

ணுங்கள். மேலும் ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றா தீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான விரோதியா வான். நிச்சயமாக அவன் உங்களுக்கு ஏவுவதெல்லாம் தீய தையும், மானக்கேடானவற்றையும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது(பொய்யாகக்)கூறுவதையும்தான்(2.168-169).

மேலும் கூறுகின்றான். உங்களை ஷைத்தான் (நேர்வழியில் செல்வதை விட்டும்) தடுத்து விடவும் வேண்டாம். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதியாவான்(43.62).

ஷைத்தானைப் பின்பற்றுபவர்களெல்லாம் நஷ்டத்தையும், கஷ்டத்தையுமே சம்பாதித்துக் கொள்வார்கள் என்பதை அல் லாஹ் இவ்வாறு கூறுகின்றான். ஷைத்தான் அவர்களை மிகைத்து விட்டான். ஆகவே அல்லாஹ்வைப் பற்றிய நினைவை அவர்களுக்கு மறக்கச்செய்து விட்டான். இவர்கள் ஷைத்தானுடைய கூட்டத்தினர். அறிந்து கொள்வீராக! நிச்சய மாக ஷைத்தானுடைய கூட்டத்தினர் அவர்கள்தான் நஷ்ட மடைந்தோர்(58.19).

மேலும் கூறுகின்றான். மேலும் எவர் அல்லாஹ்வையன்றி (இத்தகைய) ஷைத்தானை (தனக்குப்) பாதுகாவலனாக எடுத் துக் கொள்கின்றாரோ நிச்சயமாக அவர் தெளிவான நஷ்டத் தையே அடைந்து விடுவார்(4.119).

ஷைத்தான் நமது தந்தையாகிய ஆதம் (அலை) அவர்க ளுடன் எவ்வாறு நடந்து கொண்டான்? என்பதை அல்லாஹ் இவ்வாறு கூறிக்காட்டுகின்றான். ஆதமுடைய மக்களே! ஷைத் தான் உங்கள் பெற்றோர் இருவரையும் அவ்விருவரின் மானத்தை, அவ்விருவருக்கும் காண்பிப்பதற்காக வேண்டி அவ்விருவரின் ஆடையை அவ்விருவரை விட்டும் அவன் களைந்து(அவர்கள் இன்பமுடன் வசித்துவந்த) சுவனத் திலிருந்து வெளியேற்றி (சோதனைக்குள்ளாக்கி)யது போன்று உங்களையும் அவன் சோதனைக்குள்ளாக்கிவிட வேண்டாம். நிச்சயமாக அவனும் அவனுடைய இனத்தாரும் நீங்கள் அவர்

களைக் காணமுடியாதவாறு (மறைவாக இருந்து கொண்டு) உங்களை (வழி கெடுக்க சமயம்)பார்த்துக் கொண்டிருக்கின் றார்கள். நிச்சயமாக விசுவாசங் கொள்ளாதவர்களுக்கு அந்த ஷைத்தான்களை நாம் நண்பர்களாக்கியிருக்கின்றோம்(7.27).

அதனால்தான் அந்த ஷைத்தானுக்கு உள்ளாலும், புறத்தா லும் பகிரங்க விரோதியாகவே இருந்து கொள்ளுமாறு அல் லாஹ் மனிதனை பணித்திருக்கின்றான். நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு விரோதியாக இருக்கின்றான். ஆகவே அவனை நீங்களும் விரோதியாகவே எடுத்துக் கொள்ளுங்கள். அவன் (தனக்கு வழிபட்ட) தன் கூட்டத்தாரை அழைப்பதெல்லாம் அவர்கள் கொழுந்து விட்டெரியும் நரகவாசிகளில் ஆகிவிடு வதற்காகவேதான்(35.6).

நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். ஷைத்தான் மனித னின் இரத்தம் ஓடும் நாளமெல்லாம் ஓடிக் கொண்டிருக்கின் றான்.(புகாரி,முஸ்லிம்).மேற்கூறப்பட்ட ஹதீஸின் பிரகாரம் ஷைத் தான் நமது உடம்பிலும், இரத்தத்திலும் இரண்டரக் கலந்திருக் கின்றான் என்பது புலனாகின்றது. எனவே அவனது தீங்குகளி லிருந்தும், சூழ்ச்சிகளிலிருந்தும் நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்வதென்றால் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் நமது வாழ்வை அமைத்துக் கொள்வதின் மூலமாகவும், அல் லாஹ்வை வணங்குவதின் மூலமாகவும், அவனது கருணை யின் மூலமுமாகவுமே முடிகின்றது.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகையில், ஷைத்தான் மனிதனின் உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருக்கின்றான். அம்மனி தன் அல்லாஹ்வை தியானிக்காது மறந்திருக்கும்போது அவன துள்ளத்தில் சந்தேகங்களை ஏற்படுத்தி அவனை வழிகெடுக்கின் றான். அம்மனிதன் அல்லாஹ்வை தியானிக்கும்போது அவனிலே செயல்பட முடியாமல் பதுங்கியிருக்கின்றான் எனக்கூறினார்கள். மேலும் கைஸ் பின் ஹஜ்ஜாஜ் என்பவருடைய ஷைத்தான் அவரிடம் கூறியதாக அவர்களே பின்வருமாறு அறிவிக்கின்றார்

கள். எனது ஷைத்தான் என்னிடம் நான் உன் உள்ளத்தினுள் ஒரு ஒட்டகத்தைப் போன்று நுழைந்தேன். ஆனால் இன்று ஒரு சிட்டுக்குருவியைப்போன்று ஆகிவிட்டேன் எனக் கூறி னான். அதற்கு நான் எப்படி அவ்வாறு நடந்தது? எனக் கேட் டேன். அதற்கவன் நீ குர்ஆனை ஓதுவதின் மூலம் என்னை உருகச்செய்து விடுகின்றாய் என்றான்.

முத்ரிப் என்பவர் கூறுகையில், மனிதன் அல்லாஹ்வுக்கும், ஷைத்தானுக்குமிடையில் இருந்து கொண்டிருக்கின்றான். அவன் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால் அல்லாஹ் இவனைப் பாதுகாக்கின்றான். அவன் அல்லாஹ்வை மறந்துவிட்டால் இவனை ஷைத்தான் எடுத்துச்சென்று விடுகின்றான் எனக்கூறி னார்கள். மேலும் அப்துல் அஸீஸ் பின் ரபீஃ என்பவர் கூறுகை யில், ஒரு இறைவிசுவாசியின் உயிர் வானலோகத்துக்கு எடுத் துச் செல்லப்பட்டால், அதைக் கண்ணுறும் மலக்குகள் ஷைத் தானிடமிருந்து இந்த அடியானைப் பாதுகாத்த இறைவன் தூய்மையடைந்து விட்டான். இந்த அடியான் எவ்வாறு ஷைத் தானிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டான் என ஆச்சரியப்படுகின்றார்கள்.

**ஷைத்தானின் சூழ்ச்சிகள்.**

பொதுவாக ஷைத்தான், மனிதன் அல்லாஹ்வுக்கு வழிப்படு வதையோ, அதன்மூலம் சுவனம் செல்வதையோ விரும்பமாட் டான். அவ்வாறு ஒருவன் அல்லாஹ்வுக்கு விருப்பமான விஷ யங்களில் ஈடுபடும்போது எவ்வாறாயினும் அதைச் செய்ய விடாது தடுத்து அல்லாஹ்வுக்கு மாறுசெய்யச் செய்து அவனை நரகத்துக்கு இட்டுச் செல்லவே முயற்சிப்பான். அல் லாஹ் கூறுகின்றான். அவன் (தனக்கு வழிபட்ட)தன் கூட் டத்தாரை அழைப்பதெல்லாம், அவர்கள் கொழுந்து விட்டெரி யும் நரகவாசிகளில் ஆகிவிடுவதற்காகவேதான்(35.6).

ஷைத்தான் மனிதர்களுக்கு அழகுறக்காட்டும் தீயவைகளை யும், சூழ்ச்சிகளையும், அவன் விரிக்கும் வலைகளையும் அல்

குர்ஆனும், ஹதீஸும் நமக்கு சிறந்த முறையில் தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமான சிலதைப் பார்ப்போம்.

- ஷைத்தான் மனிதனை அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்குமாறும், அவனை நிராகரிக்குமாறும் ஏவிக் கொண்டேயிருப்பான். அல்லாஹ் கூறுகின்றான். (இவர்களுக்கு உதாரணம்) ஷைத்தானுடைய உதாரணத்தைப் போன்றாகும். அவன் மனிதனிடம் நீ (அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும்) நிராகரித்துவிடு என்ற சமயத்தில் (அதைக் கேட்டுப்) பின்னர் அவன் நிராகரித்து விட்டபொழுது (ஷைத்தான் அவனிடம்) நிச்சயமாக நான் உன்னைவிட்டு நீங்கிக் கொண்டேன் எனக்கூறினான்(59.16). மேலும் அவன் வழிகெடுக்கக் கையாளும் வழிமுறைகளிலுள்ளதுதான் அவன் ஒருபோதும் இறைவிசுவாசியை ஒரே முறையில் இறை நிராகரிப்பின்பால் அழைக்கமாட்டான். மாறாக கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்கு தீயவைகளில் ஆசையூட்டி பின் சிறு தவறுகளை செய்ய வழிவகுப்பான். ஒருவன் சிறு பாவங்களில் ஈடுபடுவதின்மூலம் அவன் பெரும் பாவங்களிலும் ஈடுபகின்றான். யார் பெரும் பாவங்களில் ஈடுபடுகின்றானோ அவன் இறைநிராகரிப்பின் பக்கம் நெருங்கி விடுகின்றான். அதைவிட்டும் அல்லாஹ்தான் நம்மனைவரையும் பாதுகாக்க வேண்டும். மேலும் அல்லாஹ் கூறுவதை நபி(ஸல்)அவர்கள் அறிவிக்கையில், நான் எனது அடியார்களை தூய்மையானவர்களாக படைத்துள்ளேன். மேலும் நான் எனது தரப்பிலிருந்து அவர்களுக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தாதவரை ஷைத்தான் அவர்களை அவர்களது மார்க்கத்தை விட்டும் திருப்பி நான் அவர்களுக்கு ஆகுமாக்கியவைகளை ஹராமாக்கி அவர்களை எனக்கு இணைகற்பிக்குமாறு ஏவிக் கொண்டேயிருப்பான் எனக் கூறியதாக கூறுகின்றார்கள்(முஸ்லிம்).

- மனிதன் கொண்டிருக்கும் மார்க்க அடிப்படை நம்பிக்கைக ளில் சந்தேகங்களை ஏற்படுத்தி அதிலே பிளவையேற்படுத் துகின்றான். நபி(ஸல்)அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், உங்களிடம் ஷைத்தான் வந்து இதனை யார் படைத்தது? இதனை யார் படைத் தது? என வினா எழுப்பிவிட்டு இறுதியில் உனது இறை வனை யார் படைத்தது? என்ற வினாவுக்கு வந்து விடுவான். அந்நிலைக்கு அவன் வந்து விட்டதை நீங்கள் உணர்ந்தால் அல்லாஹ்விடம் பாது காப்புத்தேடி அதனோடு முடித்துக் கொள்ளுங்கள் எனக்கூறுகின்றார்கள் (புகாரி, முஸ்லிம்). இந்தஹதீஸின் பிரகாரம் நம்முடைய கொள்கை விஷயத்தில் ஷைத்தான் தலையிட்டால் அல்லாஹ்விடம் அவனது தீங்குகளை விட்டும் பாதுகாப்புத்தேடி அதனைப் பற்றி சிந்திக்காமல் விட்டுவிடுவது நமது கட்டாயக் கடமை என்பது தெளிவாகின்றது.
- மனிதர்கள் அல்லாஹ்வுக்கு வழிப்படுவதை விட்டும் தடுத் துக் கொண்டிருப்பான். நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், ஷைத்தான் மனிதனை பலவகையில் வழிகெடுக்க முயற்சித் தான். முதலாவதாக மனிதன் இஸ்லாத்தை ஏற்கச் செல்லும் போது அவனிடம் குறுக்கிட்டு உனதும், உனது தந்தை யினதும், பரம்பரையினதும் மார்க்கத்தை விட்டுவிட்டு இஸ் லாத்தையா தழுவப்போகின்றாய்? எனக்கேட்டான். அம்மனி தன் அதற்கு செவிமடுக்காது இஸ்லாத்தைத் தழுவினான். பின் ஹிஜ்ரத் மேற்கொள்ளும்போது குறிக்கிட்டு உனது சொந்த ஊரைவிட்டா நீ ஹிஜ்ரத் செய்யப் போகின்றாய்? எனக்கேட்டான். அதற்கும் அவன் செவிமடுக்காது ஹிஜ் ரத்தை மேற்கொண்டான். பின் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்யச் செல்லும்போது குறிக்கிட்டு, நீ உனது

உயிர், பணம் அனைத்தையும் செலவு செய்தா ஜிஹாத் செய்யப் போகின்றாய்? நீ அவ்வாறு போரிட்டு கொலை செய்யப்பட்டால் உனது மனைவி வேறுதிருமணம் செய்து உனது சொத்துக்களும் பங்கு வைக்கப்பட்டு விடுமே! என்றான். அதற்கும் அவன் செவிமடுக்காது அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்தான். அம்மனிதன் நடந்து கொண்டது போன்று உங்களில் யார் நடந்து கொள்கின்றார்களோ அவரை சுவனத்தில் குடியிருத்த அல்லாஹ்வுக்கு பொறுப்பாகிவிட்டது. யார் கொலை செய்யப்படுகின்றானோ அவனை சுவனத்தில் குடியிருத்த அல்லாஹ்வுக்கு பொறுப்பாகி விட்டது. யார் நீரில் மூழ்கி மரணிக்கின்றானோ அவனை சுவனத்தில் குடியிருத்த அல்லாஹ்வுக்கு பொறுப்பாகிவிட்டது. யாரை தனது வாகனம் கவிழ்த்து மரணிக்கச் செய்கின்றதோ அவனை சுவனத்தில் குடியிருத்த அல்லாஹ்வுக்கு பொறுப்பாகிவிட்டது எனக்கூறினார்கள் (அஹ்மத்). மேற்கூறப்பட்ட பொன்மொழி மனிதன் மேற்கொள்ள முனையும் அனைத்து நற்கிரியைகளையும் ஷைத்தான் தடுத்துநிறுத்தவே முயற்சிப்பான் என்பதை தெளிவுபடுத்துகின்றது. அல்லாஹ் கூறுகின்றான். நீ என்னை வழிகெட்டவனாக ஆக்கிய காரணத்தால் (ஆதமுடைய சந்ததிகள்) உன்னுடைய நேரான வழியில் (செல்லாது தடை செய்ய வழிமறித்து அதில்)அவர்களுக்காக திட்டமாக உட்கார்ந்து கொள்வேன் என்றும் (இப்லீஸாகிய) அவன் கூறினான். பின்னர் நிச்சயமாக அவர்களுக்கு முன்னும், அவர்களுக்குப் பின்னும், அவர்களின் வலப்புறங்களிலும், அவர்களின் இடப் புறங்களிலும் அவர்களிடம் நான் வந்து (அவர்களை வழிகெடுத்துக்) கொண்டேயிருப்பேன். மேலும் அவர்களில் பெரும்பாலோரை(உனக்கு)நன்றி செலுத்துவோர்களாக நீ காண மாட்டாய்(என்றும் கூறினான்)(7.16−17).

- அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்யத் தூண்டிக் கொண்டேயிருப்பான். இச்செயல் முதன் முதலாக அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களுக்கு சுவனத்தில் வைத்துத் தடுத்த மரக்கனியை உண்ணச் செய்து அல்லாஹ்வுக்கு மாறுசெய்ய வைத்து, அச்சுவனத்திலிருந்தே அவரையும், அவரது சந்ததியினரையும் வெளியாக்கச் செய்ததின் மூலம் தெளிவாகின்றது. அல்லாஹ் கூறுகின்றான். ஆனால் ஷைத் தான் அவருக்கு (அவர் மனதில்) ஊசலாட்டத்தை உண் டாக்கி விட்டான். நித்திய வாழ்வளிக்கும் மரத்தையும், முடிவில்லா அரசாங்கத்தையும் உமக்கு நான் அறிவித்துத் தரட்டுமா? என்று கேட்டான். (முடிவாக) அவ்விருவரும் அ(ம்மரத்)திலிருந்து புசித்து விட்டார்கள். உடனே (அவ் விருவரின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டிருந்த) அவ் விருவரின் மர்மஸ்தானங்களும் அவ்விருவருக்கும் வெளி யாயின. அச்சுவனத்தின் இலைகளைக் கொண்டு தங்களை மறைத்துக்கொள்ள அவ்விருவரும் முற்பட்டனர். ஆகவே ஆதம் தன் இரட்சகனுக்கு மாறு செய்துவிட்டார் எனவே அவர் வழிதவறிவிட்டார்(20.120–121).
- மனிதனை தீயவைகளில் ஈடுபடுமாறு தூண்டிக் கொண்டே யிருப்பான். அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக அவன் உங்களுக்கு ஏவுவதெல்லாம் தீயதையும், மானக் கேடான வற்றையும் நீங்கள் அறியாதவற்றையும் அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவதையும்தாம்(2.169).

  மேலும் கூறுகின்றான். (நீங்கள் தருமம் செய்வதால்) ஷைத்தான் உங்களுக்கு ஏழ்மையை அச்சுறுத்தி மானக் கேடானதைக் கொண்டு உங்களை அவன் ஏவுகின்றான் (2.268).

  மேலும் கூறுகின்றான். பின்னர் அவ்விருவருக்கும் மறைக்கப்பட்டிருந்த அவ்விருவருடைய வெட்கத்தலங்

களையும் அவ்விருவருக்கும் வெளிப்படுத்துவதற்காக ஷைத்தான்(அவர்களிடம் இரகசியமாகப்பேசி தவறான எண்ணத்தை) ஊசலாட்டத்தை அவ்விருவருக்கும் உண்டாக்கினான்(7.20).

- மார்க்கத்தில் தெளிவாய் இருப்பவர்களின் உள்ளத்தில் குழப்பங்களை ஏற்படுத்துகின்றான். அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக ஷைத்தான் நாடுவதெல்லாம் மதுவிலும், சூதாட்டத்திலும் (அதன் மூலம்) உங்களுக்கிடையில் விரோதத்தையும், வெறுப்பையும் உண்டு பண்ணவேயாகும்(5.91). மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், அரேபிய தீபகற்பத்தில் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருப்பவர்கள் ஷைத்தானாகிய தன்னை வணங்க மாட்டார்கள் என அவன் நிராசையடைந்து விட்டான். ஆயினும் அவன் அவர்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்திக் கொண்டேயிருப்பான் எனக்கூறினார்கள்(முஸ்லிம்).
- மனிதர்கள் அல்லாஹ்வை தியானிப்பதை விட்டும் மறக்கடிக்கச்செய்து அவர்களை அவன் வழிகெடுத்துக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ்வை திக்ரு செய்வது உள்ளங்கள் உயிருடனிருப்பதற்குரிய முக்கிய வழிவகையென்பதை ஷைத்தான் அறிந்து வைத்திருக்கின்றான். அதனால்தான் அவர்களை அதில் ஈடுபட விடாது அவர்களது உள்ளங்களை மரிக்கச்செய்து அதன் ஒளியையே அகற்றி விடுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான். ஷைத்தான் அவர்களை மிகைத்து விட்டான். ஆகவே அல்லாஹ்வைப் பற்றிய நினைவை அவர்களுக்கு மறக்கச்செய்து விட்டான். இவர்கள் ஷைத்தானுடைய கூட்டத்தினர். அறிந்து கொள்வீராக! நிச்சயமாக ஷைத்தானுடைய கூட்டத்தினர் அவர்கள்தான் நஷ்டமடைந்தோர்(58.19).

மேலும் கூறுகின்றான். அவ்விருவரில் எவர் நிச்சயமாக விடுதலை பெறுவார் என அவர் எண்ணினாரோ அத்தகையவரிடம் நீ உன் எஜமானனிடம் என்னைப் பற்றிக் கூறுவாயாக! என்று (யூசுபாகிய) அவர் கூறினார். ஆனால் (சிறைக்கூடத்திலிருந்து வெளியேறிய) அவர் தன் எஜமானனிடம் கூற இருந்த(எண்ணத்)தை ஷைத்தான் அவருக்கு மறக்கடித்து விட்டான். ஆதலால் அவர் சிறைக்கூடத்தில் (பின்னும்)சில ஆண்டுகள் தங்கிவிட்டார்(12.42).

மேலும் கூறுகின்றான். எவர் (ஒருவர்) அர்ரஹ்மானுடைய நல்லுபதேசத்தை விட்டும் புறக்கணித்து விடுகிறாரோ, அவருக்கு நாம் ஒரு ஷைத்தானை (நண்பனாக)ச் சாட்டி விடுவோம். அவன் அவருக்கு இணை பிரியாத தோழனாகி விடுகின்றான். நிச்சயமாக (ஷைத்தான்களாகிய) அவர்கள் அவர்களை (அல்லாஹ்வின்) நேரான பாதையிலிருந்து தடுத்தும் விடுகின்றனர். மேலும் நிச்சயமாக தாங்கள் நேரான பாதையில் இருப்பவர்கள் எனவும் அவர்கள் எண்ணிக் கொள்வார்கள்(43.36-37).

- மனிதன் தொழுகையில் பொடுபோக்காய் இருக்கவும், அல்லது அதனை முற்று முழுதாக விட்டுவிடவும் அவன் தூண்டிக் கொண்டிருக்கின்றான். தொழுகை இஸ்லாத்தின் முக்கிய தூணாகக் கருதப்படுவதாலும், அல்லாஹ்வை நினைவு கூறக்கூடிய முக்கிய ஒரு வணக்கமாயிருப்பதனாலும் ஷைத்தான் மனிதர்களை அத்தொழுகையை நிறைவேற்ற விடாமலும், அல்லது அதனை நிறைவேற்றுபவர்கள் அதனது நேரங்கள், கடமைகள், சுன்னத்துக்கள் போன்றவைகளில் கவனம் செலுத்தாமலும் இருக்க ஒருவித சோம்பலை அவர்களில் ஏற்படுத்தி விடுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக ஷைத்தான் நாடுவதெல்லாம் மதுவிலும், சூதாட்டத்திலும் (அதன்மூலம்) உங்களுக்கிடையில் விரோதத்தையும், வெறுப்பையும் உண்டுபண்ணவும்,

அல்லாஹ்வை நினைவு கூறுவதை விட்டும், தொழு கையை (நிறைவேற்றுவதை) விட்டும் உங்களை அவன் தடுப்பதையுமேயாகும். (ஆகவே அவைகளிலிருந்து) நீங் கள் விலகிக் கொள்கிறீர்களா?(5.91). மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறி விக்கையில், தொழுகைக்காக அதான் சொல்லப்பட்டால் அதன் சப்தத்தை கேட்கக் கூடாதென ஷைத்தான் அவ னது பின்துவாரத்திலிருந்து காற்று வெளியாகும்வரை ஓடு கின்றான். அதான் முடிந்து விட்டால் மீண்டும் திரும்பி விடுகின்றான். மீண்டும் தொழுகைக்கு இகாமத் சொல்லப் பட்டால் மீண்டும் ஓடி விடுகின்றான். இகாமத்தும் சொல்லி முடிந்தால் உடனே திரும்பிவந்து மனிதனிடம் இதனை நினைத்துப்பார். இதனை நினைத்துப்பார் எனக்கூறி பல விஷயங்களை ஞாபகப்படுத்தி, அவன் எத்தனை ரக்அத் துக்கள் தொழுதான் என அவனால் நினைவுகூற முடியாத வாறு அவனை வேறு விஷயங்களில் சிந்திக்கச் செய்து விடுகின்றான் எனக்கூறினார்கள்(முஸ்லிம்). மேலும் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நான் நபி (ஸல்) அவர் களிடம் தொழுகையில் திரும்பிப் பார்ப்பதைப் பற்றி வினவி னேன். அதற்கு நபியவர்கள், அவ்வாறு திரும்பிப்பார்ப்பது மனிதனுடைய தொழுகையிலிருந்து ஷைத்தான் அவனது பங்கை எடுத்துக் கொள்வதாகும் என்றார்கள்(புகாரி, முஸ்லிம்).

- மனிதர்களுக்கு அறிவில்லாத விஷயங்களிலெல்லாம் தலை யிட்டு இது அல்லாஹ் கூறியதெனக்கூறி அவன்மீது இட் டுக்கட்ட வழிவகுத்துக் கொண்டிருக்கின்றான். நாம் நமக் குத் தெரியாதவைகளில் வாய் மூடியிருக்காது அதிலே தலையிட்டு இதனையும் அல்லாஹ்தான் கூறியிருக்கின்றான் எனக்கூறி அவன்மீது இட்டுக்கட்டுவது பெரிய தவறும், இறை நிராகரிப்புமாகும். அல்லாஹ் கூறுகின்றான். எவர்

அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றாரோ அவர் திட்டமாக மகத்தான பாவத்தை பொய்யாகக் கற்பனை செய்து விட்டார்(4.48).

மேலும் கூறுகின்றான். நிச்சயமாக பொய்யைக் கற்பனை செய்வதெல்லாம் அல்லாஹ்வுடைய வசனங்களை நம்பாத வர்கள்தாம்(16.105). மேலும் ஷைத்தான் இந்த இழிசெயலின் பால் மனிதனை அழைத்துக் கொண்டிருப்பான் என்பதை அல்லாஹ் பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றான். நிச்சயமாக அவன் உங்களுக்கு ஏவுவதெல்லாம் தீயதையும், மானக் கேடானவற்றையும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவதையும்தாம்(2.169).

- இம்மை மறுமை விஷயங்களில் ஷைத்தான்களிடமும், அவர்கள் வழிவந்தவர்களிடமும் தீர்ப்புக்கோர வழிவகுத் துக் கொண்டிருக்கின்றான். அவ்வாறு அவர்களிடம் தீர்ப் புக் கேட்டுச் செல்வதைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். (நபியே!) உம்மீது இறக்கப்பட்ட(இவ் வேதத்)தையும், உமக்கு முன்னர் இறக்கி வைக்கப்பட் டுள்ள (வேதங்கள் யா)வற்றையும் மெய்யாகவே தாங்கள் விசுவாசிப்பதாக எண்ணிக் கொண்டிருப்போரின்பால் நீர் பார்க்கவில்லையா? அவர்கள் தாகூத்தை (ஷைத்தானை) தீர்ப்புக் கூறுபவனாக ஆக்க நாடுகிறார்கள்.(ஆனால்) அவர் களோ அவனை நிராகரித்துவிட வேண்டுமெனத் திட்டமா கக் கட்டளையிடப்பட்டுள்ளார்கள். அந்த ஷைத்தானோ அவர்களை வெகுதூரமான வழிகேட்டில் வழிகெடுத்து விடவே நாடுகின்றான்(4.60).
- அல்லாஹ் தடுத்த தீயவைகளை சிறந்தவைகளாக அழகுற எடுத்துக் காட்டுகின்றான். அல்லாஹ் தனது கருணையிலி ருந்து அவனைத் தூரமாக்கி, உலகுக்கு தூக்கியெறிந்த போதே அதனைப்பற்றி அவன் தெளிவாகக் கூறிவிட்டான்.

அவ்வாறு கூறியதைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். அ(தற்க)வன் என்னுடைய இரட்சகனே! நீ என்னை வழிகேட்டில் விட்டுவிட்டதன் காரணமாக பூமியில் (உள்ளவற்றை) நான் நிச்சயமாக அவர்களுக்கு அலங்கரித்துக் காண்பித்து, அவர்கள் அனைவரையும் நிச்சயமாக நான் வழிகெடுத்து விடுவேன் என்று கூறினான்(15.39). மேலும் அவன் பத்ர் தினத்தில் குறைஷிக் காபிர்கள் மேற்கொண்ட தீயசெயல்களை அவர்களுக்கு அழகுறக்காட்டி அல்லாஹ்வை நிராகரிக்கச் செய்து அவனது நபிக்கெதிராக அவர்கள் படைதிரட்டும் அளவுக்கு அவர்களை ஆளாக்கி விட்டதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். ஷைத்தான் அவர்களுடைய (பாவச்) செயல்களை அவர்களுக்கு அலங்கரித்துக் காண்பித்து இன்று மனிதர்களில் உங்களை வெற்றி கொள்வோர் எவருமில்லை. நிச்சயமாக நானும் உங்களுக்கு(ப் பக்க)த்துணையாக நிற்கின்றேன் என்று கூறிக் கொண்டிருந்ததையும் (நபியே! நீர் நினைவு கூர்வீராக! இவ்வாறு கூறிக்கொண்டிருந்த) அவன் இருபடைகளும் நேருக்கு நேராகச் சந்தித்துக் கொண்டபொழுது புறமுதுகிட்டுச் சென்று நிச்சயமாக நான் உங்களைவிட்டு விலகிக் கொண்டேன். நிச்சயமாக நீங்கள் பார்க்காதவற்றை நான் பார்க்கின்றேன். நிச்சயமாக நான் அல்லாஹ்வுக்குப் பயப்படுகின்றேன். தண்டிப்பதில் அல்லாஹ் மிக்க கடுமையானவன் என்றும் கூறினான்(8.48). மேலும் கல்நெஞ்சங் கொண்டோர்களைப்பற்றி அல்லாஹ் கூறும்போது பின்வருமாறு கூறுகின்றான். நம் வேதனை அவர்களுக்கு வந்த போது அவர்கள்(அதிலிருந்து காத்துக் கொள்ள பிரார்த்தனைகள் செய்து) பணிந்திருக்க வேண்டாமா? ஆனால் அவர்களுடைய இதயங்கள் கல்நெஞ்சாகி விட்டன. மேலும் அவர்கள் செய்து கொண்டிருந்தவைகளை ஷைத்தான் அவர்களுக்கு அலங்காரமாகக் காண்பித்து விட்டான்(6.43).

மேலும் பல்கீஸையும், அவளது கூட்டத்தினரையும் பற்றிக் கூறும்போது பின்வருமாறு கூறுகின்றான். அவளையும், அவளுடைய சமூகத்தாரையும் அல்லாஹ்வையன்றி சூரியனுக்குச் சிரம்பணி(ந்து வணங்கு)பவர்களாக நான் கண்டேன். அவர்களுடைய இக்காரியங்களை ஷைத்தான் அவர்களுக்கு அலங்காரமாகக் காண்பித்தும் விட்டான். எனவே அவர்களை நேரான பாதையிலிருந்து அவன் தடுத்துவிட்டான். ஆகவே அவர்கள் நேர்வழி பெறவில்லை(27.24).

- ஷைத்தான் மனிதர்களை நோவினை செய்து கொண்டிருக்கின்றான். மனிதன் எப்போது தன்னையே மறந்த நிலையில் இருக்கின்றானோ அப்போது ஷைத்தான் அவனை தன்வசப்படுத்தி தனக்கு வேண்டியவாறு அவனை ஆட்டிப் படைக்கின்றான். அந்நேரத்தில் அம்மனிதன் ஷைத்தானுக்கு அடிமையாகி அவன் ஆட்டுவது போன்றெல்லாம் இவன் ஆடிக்கொண்டிருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். வட்டியை உண்பவர்கள் ஷைத்தான் தீண்டியதால் எவனை அவன் நினைவிழக்கச் செய்தானோ அத்தகையவன் எழும்புவது போலன்றி (வேறுவகையாக மறுமை நாளில்) அவர்கள் எழமாட்டார்கள்(2.275). ஷைத்தான் அம்மனிதனில் ஆதிக்கம் செலுத்தும்போது அம்மனிதனுக்கு சில நோய்களும், துன்பங்களும் தொற்றிக் கொள்கின்றது. அய்யூப் (அலை) அவர்களுக்கும் அவ்வாறுதான் இருக்க வேண்டும். அல்லாஹ் அவர்களைப்பற்றி கூறும்போது பின்வருமாறு கூறுகின்றான். மேலும் (நபியே!) நமது அடியார் அய்யூபை நினைவு கூர்வீராக! அவர் தன் இரட்சகனை அழைத்(துப் பிரார்த்தனை செய்)து நிச்சயமாக என்னை ஷைத்தான் துன்பத்தையும், வேதனையையும் கொண்டு தீண்டி விட்டான்(என்று கூறினார்)(38.41). அவ்வாறு ஷைத்தானுக்கு வழிப்படும்போது நோய்கள் நம்மைத் தொற்

றிக் கொள்ளும் என்பதற்கு வேறோர் ஆதாரமாக நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், கொலரா (வயிற்றோட்டம்) ஜின்களிலுள்ள உங்களது விரோதிகள் மூலம் ஏற்படுவதாகும். அப்படி ஏற்பட்டு நீங்கள் மரணித்தால் உங்களுக்கது வீரமரணமாகும் எனக்கூறினார்கள்(ஹாகிம்).

- ஷைத்தான் மனிதர்களில் கடும் கோபத்தையும் அவசரத் தன்மையையும் ஏற்படுத்துகின்றான். குறிப்பாக கோபமும், அவசரமும் ஷைத்தானைச் சேர்ந்தவையென்பதை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள். கோபம் ஷைத்தானின் பண்புகளிலுள்ளதாகும்(அபூதாவுத்). மேலும் மூஸா (அலை) அவர்களும் தனது எதிரியை கொலை செய்வதற்கு காரணமாயிருந்தது அந்த தீயகோபமேதான் என்பதை நினைத்து மனம் வருந்தியதையிட்டு அல்லாஹ் பின்வருமாறு கூறிக் காட்டுகின்றான். அந்நகரத்தில் அதைச் சார்ந்தோர் பாராமுகமாக (அயர்ந்து தூக்கத்தில்) இருந்த சமயத்தில் (மூஸாவாகிய) அவர் நுழைந்தார். அப்போது சண்டையிட்டுக் கொண்டிருந்த இரண்டு மனிதர்களை அதில் அவர் கண்டார். இ(தில் ஒரு)வன் அவருடைய கூட்டத்தைச் சார்ந்தவன். இ(ன்னொரு) வன் அவருடைய பகைவனைச் சார்ந்தவன். அப்போது அவர் இனத்தைச் சேர்ந்தவன் அவருடைய பகைவனைச் சார்ந்தவனுக்கு எதிராக உதவி செய்யுமாறு அவரிடத்தில் கோரினான். (அதற்கிணங்கி) மூஸா அவனை ஒரு குத்துக் குத்தினார். அவன் காரியத்தை முடித்து விட்டார். (அவன் இறந்து விட்டதை அறிந்த மூஸா) இது ஷைத்தானுடைய செயலில் உள்ளதாகும். நிச்சயமாக அவன் பகிரங்கமாக வழிகெடுக்கக்கூடிய விரோதி எனக்கூறினார்(28.15). இப்னு ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் கூறுகையில், மனிதர்களிலுள்ள எக்குணம் அவர்களை வழிகெடுப்பதற்கு உனக்கு மிகவும் உதவியாக இருக்கும்? என ஷைத்தானிடம் வினவப்பட்

டது. அதற்கவன் மனிதனது கடிண குனமும், கோபமுமா கும் எனப் பதிலளித்தான். அதற்கு காரணம் கூறும்போது மனிதன் இரும்பைப் போன்று கடிணமாக இருக்கும் போதுதான் குழந்தைகள் பந்தை எவ்வாறு எளிதாக உருட்டி விளையாடுகின்றார்களோ, அதேபோன்று அவனை யும் எனக்கு விரும்பியவாறு உருட்டி விளையாடலாம் எனக்கூறினான். மேலும் அவசரத்தைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், நிதானம் அல்லாஹ்விடமும், அவச ரம் ஷைத்தானிடமும் உள்ளதாகும் எனக் கூறியிருக்கின் றார்கள்(திர்மிதி).

- ஷைத்தான் மனிதனது மரணத்தருவாயில் அவனைக் குழப்பி வழிகெடுத்துக் கொண்டிருப்பான். பொதுவாக செயல்கள் அனைத்தும் அதனது முடிவைக் கொண்டே நிர்ணயிக்கப்படுவதால், மனிதனுடைய இறுதிமுடிவு சிறந்த தாக அமைந்துவிடக் கூடாதென்பதில் ஷைத்தான் மிக வும் கவனமாய் இருக்கின்றான். அதனால்தான் அம் மனி தன் மரணிக்கும்போது அவனுக்கு சில தீய எண்ணங் களை ஏற்படுத்தி இழிவான முறையில் அதிலும் சிலகட்டங் களில் இறைவனை நிராகரித்தவாறும் மரணத்தைத் தழு வச் செய்கின்றான். அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மினத்தரத்தீ வல்ஹதமி, வல்கரகி, வல்ஹரீக்கி, வஅஊது பிக அன் யதகப்பத்னீஷ் ஷைத்தானு இன்தல் மவ்த் எனும் பிரார்த்தனையை பிரார்த் தித்துக் கொண்டேயிருப்பார்கள்.

பொருள்: இறைவா! நான் உயரத்திலிருந்து விழுந்தும், (கட்டிடங்கள்) என்னில் இடிந்து விழுந்தும், நீரில் மூழ்கி யும், எரிந்தும் மரணிப்பதை விட்டும், நான் மரணிக்கும் போது ஷைத்தான் என்னை பிடித்துக் கொள்வதை விட் டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்(திர்மிதி). எனவே இஸ்லாமிய அடிப்படையில் வாழும் ஒருவன்

கடைசித் தருவாயில் தன்னை ஷைத்தான் வழிகெடுத்து விடக்கூடாதென்ற நோக்கில் நல்லமல்களில் ஈடுபட வேண்டும். பொதுவாக மனிதன் எந்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றானோ அதே நிலையில்தான் அவன் மரணத்தையும் தழுவிக் கொள்கின்றான். அவன் நற்கிரியைகளில் ஈடுபட்டவனாக தனது வாழ்வை அமைத்துக் கொண்டிருந்தால் அவ்வாறான முறையிலும், தீயவழிகளிலே சென்று தனது வாழ்வை அழித்துக் கொண்டிருந்தால், கடைசித் தருவாயில் தீயவைகளில் ஈடுபட்டவனாகவும் மரணத்தை தழுவிக் கொள்கின்றான்.

- ஷைத்தான் மனிதர்களை வழிகெடுக்க பெண்களை உபயோகப்படுத்துகின்றான். பொதுவாக தமது உடலுறுப்புக்கள், மற்றும் மறைக்கப்பட வேண்டிய அங்கங்கள் தெரியும் வகையில் திறந்து கொண்டு நடமாடுகின்ற பெண்களை வைத்துத்தான் ஷைத்தான் மனிதர்களை அதிகமாக வழிகெடுக்கின்றான். எனவே அவ்வாறான பெண்களின் அழகில் மதிமயங்கிக் கிடப்பவர்கள்தாம் ஷைத்தானுக்கு விலை போகின்றார்கள். அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், பெண்கள் மறைந்திருக்க வேண்டிய பொக்கிஷங்களாகும். எப்போது அவர்கள் தங்களது இருப்பிடமான வீட்டைவிட்டு வெளியாகின்றார்களோ, அப்போது ஷைத்தான் அவர்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுகின்றான் எனக்கூறினார்கள்(திர்மிதி).
- சயீத் பின் முஸய்யப்(ரலி)அவர்கள் கூறுகையில், அல்லாஹ் எல்லா நபிமார்களையும் மக்களுக்கு வழிகாட்டியாக அனுப்புகையிலும் பெண்கள் மூலமாக நீங்கள் அழிக்கப்படுவதை பயந்து கொள்ளுங்கள் எனக்கூறியே அனுப்பி வைக்கின்றான் எனக்கூறுகின்றார்கள். பெண்களின் பிரச்சினை பெரும் பிரச்சினையாய் இருப்பதால்தான் நபி (ஸல்) அவர்கள் கூறு

கையில், உலகம் பசுமையானதோர் நந்தவனமாகும். அதிலே நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் என்பதைப் பார்க்கத்தான் அல்லாஹ் உங்களை அங்கே அனுப்பிவைத்துள்ளான். எனவே உலகையும், அதிலே உள்ள பெண்களையும் பயந்து கொள்ளுங்கள். ஏனெனில் பனூஇஸ்ரவேலர்களின் முதற் பிரச்சினைக்குக் காரணமே பெண்கள் தான் எனக்கூறினார்கள்(முஸ்லிம்).

- ஷைத்தான் கணவன் மனைவியருக்கிடையில் பிரிவை ஏற்படுத்துகின்றான். கணவன் மனைவியைப் பிரித்து, பிள்ளைகளை அலைக்கழிய வைத்து, இன்பமாய் இருந்த வீட்டை பிரச்சினைக்குள்ளாக்கி குடும்பத்தை சின்னா பின்னப் படுத்துவதும் ஷைத்தானின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். அதனால்தான் அவன் கணவன் மனைவியருக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்தி அவர்களை பிரித்து வைப்பதில் குறியாய் இருக்கின்றான். நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் (ரலி)அவர்கள் அறிவிக்கையில், ஷைத்தான் தனது (அர்ஷை) ஆட்சிபீடத்தை நீரின்மேல் அமைத்து மக்களை வழிகெடுக்குமாறு தனது படையினரை அனுப்பி வைக்கின்றான். அவர்களில் பாரியதோர் பிரச்சினையை ஏற்படுத்திவிட்டு வருபவன்தான் அவனுக்கு மிகவும் நெருக்கமானவனாக கருதப்படுகின்றான். அவர்களில் ஒருவன் வந்து நான் ஒரு கணவனுக்கும், மனைவிக்குமிடையில் பிரச்சினையை ஏற்படுத்தி அவர்களிருவரையும் பிரித்து விட்டு வந்துள்ளேன் எனக்கூறுவான். அப்போது அப்பெரிய ஷைத்தான் அவனைப் பக்கத்தில் அழைத்து ஆம், நீதான் சிறந்த காரியத்தைப் பண்ணிவிட்டு வந்திருக்கின்றாய் எனக்கூறுவான் எனக்கூறினார்கள் (முஸ்லிம்).

**ஷைத்தானின் சூழ்ச்சிகளை தவிர்ந்திருவோம்.**

நபி (ஸல்) அவர்கள் கூறியதுபோன்று ஷைத்தான் நமது இரத்தத்திலும், உடம்பிலும் ஓடிக்கொண்டு நம்மை தினமும் வழிகெடுத்துக் கொண்டிருக்கின்றான். நாம் அவனை ஒரு முறை மிகைத்து விட்டால் அவன் நம்மை ஆயிரம்முறை மிகைத்து விடுகின்றான் எனவே அவனது தீங்கிலிருந்து எவ் வாறு நம்மை பாதுகாத்துக் கொள்வது? என சிலர் அங்கலாய்கின்றனர்.

நாம் அவனது தீங்கிலிருந்து எவ்வாறு நம்மை பாதுகாத் துக் கொள்ள முடியும்? என்பதை சுருக்கமாகவும், விரிவாகவும் தெளிவுபடுத்தலாம். சுருக்கமாகக்கூறின் ஒரு மனிதன் ஷைத்தா னின் சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கேற்றவாறு தனது வாழ்வை அமைத்துக் கொள்வதின் மூலம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம். அது எவ்வாறு முடியுமென்றால் அல்லாஹ்வுக்கு இணைவைக்காது, அவனை வணங்கி, அதிகமாக திக்ருக ளில் ஈடுபட்டு, ரஸூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழி நடந்து, நல்லவைகளை ஏவி, கெட்டவைகளை தவிர்ந்து நடப்பதின் மூலமாகவும், தான் செய்த அனைத்துப் பாவங் களுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவதின் மூலமு மாகவே முடியுமானதாகும்.

மேலும் அதைவிட தெளிவாகக் கூறுவதாயின் ஷைத்தானி லிருந்து தன்னை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்குரிய வழிமுறைகளை அல்குர்ஆனும், ஹதீஸும் நமக் குத் தெளிவான முறையிலே கூறிக்கொண்டிருக்கின்றது. அவ் வாறு கூறுபவைகளில் சிலதைப் பார்ப்போம்.

- நாம் சிறந்த முறையில் அல்லாஹ்வை விசுவாசித்திருத்தல் வேண்டும். உண்மையான முறையில் அல்லாஹ்வை விசு வாசித்திருப்பவனை ஷைத்தானுடைய எத்தீங்கும் நெருங் காமல் அல்லாஹ் அவனைப் பாதுகாக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே எவர்கள்(இந்நபியை)விசுவாசித்து

(தங்களைச்) சீர்திருத்திக் கொண்டார்களோ, அவர்களுக்கு எத்தகைய பயமுமில்லை. அவர்கள் (அதுபற்றி) கவலையும் அடையமாட்டார்கள்(6.48). மேலும் கூறுகின்றான். ஆகவே அல்லாஹ்வை (உண்மையாகவே) விசுவாசித்து அவனைப் பலமாகப்பற்றிப் பிடித்துக் கொள்கின்றார்களோ அத்தகையோர் அவர்களை, அவன் தன்னிடமிருந்துள்ள அன்பிலே பிரவேசிக்கச் செய்வான்(4.175). மேலும் அவனது உண்மையான நல்லடியார்களை அனைத்து துன்பங்களிலிருந்தும் பாதுகாப்பான் என்பதை பின்வருமாறு கூறுகின்றான். மேலும் (அவர்களுக்கு தண்டனைக்குரிய) நம்முடைய உத்தரவு வந்தபொழுது ஹூதையும், அவருடன் விசுவாசங் கொண்டவர்களையும் நம்மிடமிருந்துள்ள அருளால் நாம் காப்பாற்றிவிட்டோம்(11.58). மேலும் கூறுகின்றான். நம்முடைய கட்டளை(க்கொப்ப வேதனை அவர்களுக்கு) வந்தபொழுது ஸாலிஹையும், அவருடன் விசுவாசம் கொண்டோரையும் நம்மிடமிருந்துள்ள அருளைக் கொண்டு நாம் காப்பாற்றினோம்(11.66). மேலும் கூறுகின்றான். மேலும் (அவர்களிடம்) நம்முடைய கட்டளை வந்தபொழுது ஷுஐபையும், அவருடன் விசுவாசங் கொண்டிருந்தோரையும் நம்மிடமிருந்துள்ள அருளைக்கொண்டு நாம் (இரட்சித்துக்) காப்பாற்றினோம்(11.94). மேலும் உண்மையான விசுவாசிகள் குர்ஆனையும், ஹதீஸையும் ஏற்றுக் கொள்வதுடன், ஷைத்தானை தமது விரோதியாக நினைத்து வாழும்போது ஷைத்தானுடைய ஊசலாட்டங்கள் அவர்களை நெருங்கவே மாட்டாது. அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு விரோதியாக இருக்கின்றான். ஆகவே அவனை நீங்களும் விரோதியாகவே எடுத்துக் கொள்ளுங்கள். அவன் (தனக்கு வழிபட்ட) தன் கூட்டத்தாரை அழைப்பதெல்லாம் அவர்கள் கொழுந்து விட்டெரியும் நரகவாசிகளில் ஆகிவிடுவதற்காக

வேதான் (35.6). மேலும் கூறுகின்றான். (ஏனெனில்) நிச்சய மாக ஷைத்தான் மனிதனுக்கு பகிரங்கமான விரோதியாக இருக்கின்றான் என்று(யா∴கூப் நபியாகிய)அவர் கூறினார் (12.5).

- நாம் ஒரு காரியத்தைச் செய்யும்போது அல்லாஹ்வுக் கென்ற தூய்மையான எண்ணம் இருத்தல் வேண்டும். அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு அவனது கட்டளைகளை ஏற்று நடக்கக்கூடியவன் ஒரு வணக்கத்தை செய்து கொண்டிருக்கும்போது அவனிடம் ஷைத்தான் வந்து நீ வணங்குவதை சிலர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே அவர்கள் உன்னைப் புகழ்வதற்காக இன்னும் அழ கானமுறையில் செய்துகொள் எனக்கூறி அவனது உள் ளத்தில் முகஸ்துதியை ஏற்படுத்தி அதன்மூலமாக அந்த வணக்கத்தையே பாழாக்கி அவனுக்கு தண்டனையை பெற்றுக் கொடுக்கின்றான். அவ்வாறு ஷைத்தான் மனிதர் களை வழிகெடுக்கத்தான் முயற்சிப்பான் என்பதை பின்வ ரும் சம்பவத்தின் மூலம் இப்னு ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் தல்பீஸ் இப்லீஸ் என்ற கிதாபில் தெளிவுபடுத்துகின்றார்கள். ஹசன் என்பவர் கூறும் ஒரு விஷயத்தை இவ்வாறு கூறு கின்றார். ஓர் ஊரில் அல்லாஹ்வை விடுத்து ஒரு மரத்தை சிலர் வணங்கி வந்தனர். அதனைக்கண்ட ஒரு வணக்க வாளி அல்லாஹ் அன்றி வணங்கப்படும் இம்மரத்தை நான் வெட்டி வீழ்த்தப் போகின்றேன் எனக்கூறி கோபத்துடன் அதனை வெட்டச் சென்றார். அப்போது ஷைத்தான் அவரி டம் மனிதனது தோற்றத்தில் வந்து, நீ என்ன காரியம் செய்யப் போகின்றாய்? என வினவினான். அதற்கவர் அல் லாஹ்வுக்கு மாறாக வணங்கப்படும் இம்மரத்தை வெட்டப் போகின்றேன் எனக் கூறினார். அதற்கவன் நீதான் அதனை வணங்க வில்லையே அப்படியிருக்கையில் அடுத்தவர்கள் வணங்குவதால் உனக்கு என்ன தீங்கு ஏற்பட்டு விடப்

போகின்றதென? வினவினான். அதற்கவர் அல்லாஹ் அன்றி வணங்கப்படும் அம்மரத்தை நிச்சயமாக நான் வெட்டத் தான் போகின்றேன் என அடம்பிடித்தார். அதற்கந்த ஷைத் தான் அவரிடம் அதனைவிட சிறந்ததோர் விஷயத்தை உனக்குக் கூறட்டுமா? என வினவிவிட்டு பின்வருமாறு கூறினான். நீ அதனை வெட்ட வேண்டாம். அவ்வாறு நீ வெட்டாமல் விட்டு விட்டால், அதிகாலையில் நீ உறங்கி எழும்போது உனது தலையணையின் கீழ் இரு தீனார் காசுகளைப் பெற்றுக் கொள்வாய் எனக்கூறினான். அதற்க வர் அது எவ்வாறு எனக்குக் கிடைக்கும்? என வின வினார். அதற்கவன் அதைப்பற்றி நீ சிந்திக்க வேண்டாம் எனக்கூறி சென்று விட்டான். அவரும் அதனை வெட்டா மல் வீடுவந்து இரவில் கண்ணுறங்கி அதிகாலையில் எழுந்து பார்த்தபோது தனது தலையணையின் கீழ் இரு தீனார் காசுகள் இருக்கக் கண்டார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் நமக்கு இரு தீனார் காசுகள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் அம்மரத்தை வெட்டும் நோக்கத்தை விட்டு விட்டார். மறுநாள் காலையிலும் இருதீனார்கள் இருக்கும் என்ற எண்ணத்தில் எழுந்து பார்த்தபோது அங்கே அவன் கூறிய காசு இல்லாதிருப்பதைக் கண்ட அவர் கோபத்து டன் எழுந்து அம்மரத்தை வெட்டச் சென்றார். அப்போது ஷைத்தான் அவனுடைய தோற்றத்தில் தோன்றி நீ என்ன காரியம் செய்யப் போகின்றாய்? என வினவினான். அதற்கவர் அல்லாஹ்வுக்கு மாறாக வணங்கப்படும் அம்மரத்தை நான் வெட்டப் போகின்றேன் என்றார். அதற்கவன் நீ பொய் கூறு கின்றாய். உன்னால் அம்மரத்தை வெட்டமுடியாது எனக் கூறினான். அதைக் கேட்டவர் கோபம் மேலிட்டவராக அம் மரத்தை வெட்டச் சென்றார். உடனே ஷைத்தான் அவரை அடித்து கீழேதள்ளி மூச்சுத் திணரும்வரை அவரது கழுத்தை நெரித்தான். பின்பு நான் யாரென உனக்குத்

தெரியுமா? என வினவினான். அதற்கவர் தெரியாதெனக்கூற நான்தான் ஷைத்தான். நீ முதலில் அல்லாஹ் அல்லாதவருக்காக வணங்கப்படும் மரம் இருக்கக் கூடாதென்ற உண்மையான கோபத்துடன் அம்மரத்தை வெட்ட வந்தாய். அப்போது என்னால் உன்னை ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. உடனே இரு தீனார் காசுகளைத் தருவதாக உன்னை ஏமாற்றினேன். இன்று இரு தீனார் காசுகள் கிடைக்க வில்லையே என்ற கோபத்தில் வந்திருக்கின்றபடியால் உன்னை எனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்ததெனக் கூறினான்.

- நபியவர்களது வாழ்க்கை வழிமுறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். நாம் ஷைத்தானின் சூழ்ச்சிகளிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வதற்குரிய முக்கியவழி யாதெனில் அல்குர்ஆனையும், நபி வழிமுறையையும் பின்பற்றி நடப்பதாகும். ஏனெனில் எப்போதும் ஷைத்தான் அவ்விரண்டை விட்டும் மனிதனை திசைதிருப்ப மிகவும் ஆர்வத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றான். அதனால் தான் பாவங்களில் மனிதனை ஈடுபடுத்துவதைவிட இஸ்லாத்தில் இல்லாதவைகளை உள்ளவைகளாக அவர்கள் மாற்ற வேண்டும் என்பதில் அதிக அக்கரை செலுத்துகின்றான். சுப்யானுஸ் ஸவ்ரி (ரஹ்) அவர்கள் அறிவிக்கையில், இஸ்லாத்தில் புதிதாக புகுத்தப்பட்டவைகள் மனிதர்கள் அன்றாடம் செய்யும் பாவங்களைவிட ஷைத்தானுக்கு மிகவும் விருப்பமானதாகும் எனக்கூறுகின்றார்கள். மேலும் அய்யூபுஸ் ஸக்தியானி (ரஹ்) அவர்கள் கூறுகையில், ஒருவன் இஸ்லாத்தில் இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்கி அதனை இஸ்லாத்திலுள்ளதாக்க முயற்சிக்கும் போதெல்லாம், அவன் அல்லாஹ்வைவிட்டும் தூரமாகிக் கொண்டே போகின்றான் எனக்கூறுகின்றார்கள். மேலும் புழைல் பின் இயாழ் (ரஹ்) அவர்கள் கூறும்போது யார் இஸ்லாத்தி

லுள்ள பித்அத்துக்களில் ஈடுபடுவோரை நேசிக்கின்றாரோ அல்லாஹ் அவரது நன்மைகளை அழித்து, அவரது உள்ளத்திலிருக்கும் இஸ்லாத்தின் ஒளியையே அகற்றி விடுகின்றான். மேலும் யார் இஸ்லாத்திலுள்ள பித்அத்துக்களை செய்பவனுக்கு உதவியாய் இருக்கின்றாரோ, அவர் இஸ்லாத்தையே அழித்தொழிக்க உதவி செய்கின்றார் எனக் கூறுகின்றார்கள்.

- அல்லாஹ்வுக்குச் செய்யும் வணக்கங்களில் அதிலும் குறிப்பாக தொழுகையில் சிறந்த முறையில் கவனம் செலுத்த வேண்டும். தொழுகை இஸ்லாத்தின் முக்கியத் தூண்களிலுள்ளதாயிருப்பதால் அதனை மனிதர்கள் நிறைவேற்றுவதை விட்டும் தடுக்க ஷைத்தான் மிகுந்த பிரயாசை கொள்கின்றான். அதனால்தான் அதனை பொறுப்பாகச் செய்யுமாறு குர்ஆனும், ஹதீஸும் நமக்கு வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். விசுவாசிகள் திட்டமாக வெற்றியடைந்து விட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால் தம் தொழுகையில் மிக்க உள்ளச்சம் உடையவர்கள்(23.1-2). மேலும் தொழுகையில் திரும்பிப் பார்ப்பதையிட்டு நபி (ஸல்) அவர்களிடம் ஆயிஷா (ரலி) அவர்கள் வினவியபோது, அது ஷைத்தான் மனிதனுடைய தொழுகையிலிருந்து அவனது பங்கை எடுத்துக் கொள்வதாகும் என்றார்கள்(புகாரி).மேலும் உஸ்மான் பின் அபீஆஸ் (ரலி) அவர்கள் நபியவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! எனக்கும், எனது தொழுகைக்குமிடையில் ஷைத்தான் குறிக்கிட்டு நான் ஓதுவதைக் குழறுபடி செய்கின்றான் என்றார்கள். அதற்கு நபியவர்கள் அது ஹின்ஸப் எனப்படும் ஷைத்தானாகும். அவ்வாறு அவன் வந்து குழறுபடி செய்வதை நீ உணர்ந்தால், அல்லாஹ்விடம் பாதுகாப்புத்தேடி மூன்றுமுறை இடது புறமாக துப்பிக் கொள் என்றார்கள். அதன்பிறகு நான் அவ்வாறு செய்து வருகை

யில் என்னை விட்டும் அவனை அல்லாஹ் தூரமாக்கி விட்டான் எனக் கூறுகின்றார்கள்(முஸ்லிம்). மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூசயித் அல்குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கையில், உங்களில் ஒருவர் தொழுது கொண்டிருக்கும்போது அவருக்கு முன்னால் ஒருவர் நடந்து சென்றால் அவரை தடுத்து நிறுத்துங்கள். அதனையும் மீறி அவர் நடந்து சென்றால் அப்போதும் தடுத்து நிறுத்துங்கள். அதனையும் மீறிச்சென்றால் அவன் ஷைத்தானாகும் அவனோடு சண்டையிட்டாவது அவனைத் தடுத்து நிறுத்துங்கள் என்றார்கள் எனக்கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

**அல்லாஹ்வுக்கு சிறம்பணிதல்.**

ஒரு முஸ்லிமான அடியான் தொழுவதிலும், சுஜூத் செய்வதிலும் அதிகமாக ஈடுபட வேண்டும். அவ்வாறு ஈடுபடுவதின் மூலம் ஷைத்தானை அவனது சூழ்ச்சிகளிலிருந்து செயலிழக்கச் செய்யலாம். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், மனிதன் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதி அவன் சுஜூத் செய்யும்போது அதைக் கண்ணுறும் ஷைத்தான் எனக்கேற்பட்ட கைசேதமே மனிதன் சுஜூத் செய்யுமாறு பணிக்கப்பட்டான். அவன் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து சுஜூது செய்து சுவனம் செல்கின்றான். நான் சுஜூத் செய்யுமாறு பணிக்கப்பட்டேன். நான் அதனை மறுத்ததால் நரகம் செல்லப் போகின்றேன் என ஓலமிட்டவாறு ஒதுங்கிச் செல்கின்றான் எனக் கூறுகின்றார்கள்(முஸ்லிம்).

**தொழுகையில் மறதிக்காக சுஜூத் செய்தல்.**

மனிதன் தொழுது கொண்டிருக்கையில் தொழுகையில் ஏற்பட்ட மறதிக்காக சுஜூத் செய்யும்போது ஷைத்தான் செயலிழந்து விடுகின்றான். ஏனெனில் எப்போதும் ஷைத்தான் மனிதனுடைய தொழுகையை கெடுக்கும் நோக்கில் அவனை வேறு சிந்தனைகளில் ஈடுபடுத்தி அவனுக்கு மறதியை ஏற்படுத்து

கின்றான். பின் அம்மனிதன் தான் தொழுகையில் சிலதை மறந் ததற்காக, அதனை பூரணப்படுத்தும் வகையில் மறதிக்கான சுஜூதை செய்கையில் ஷைத்தான் அதிகமாக கவலை கொள் கின்றான். நபி (ஸல்) அவர்கள் கூறியதை அபூசயீத் அல்குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கையில், உங்களில் ஒருவர் தொழுது கொண்டிருக்கும்போது தான் மூன்றா? நான்கா? தொழுதேன் என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டால், சந்தேகத்தை தவிர்த்து உறுதியான எண்ணிக்கையை மனதில் கொள்ளுங்கள். தொழு கையை பூரணப்படுத்தும் முகமாக ஸலாம் கொடுக்க முன் மறதிக்கான இரண்டு ஸஜ்தாக்களைச் செய்து கொள்ளவும். அவன் ஐந்து தொழுதிருந்தால் அந்த ஐந்தாவது ரக்அத் அவ னுக்காக அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யும். மாற்றமாக நான்கு ரக்அத்துக்களைத்தான் பூர்த்தி செய்யும் முகமாக தொழுதிருந் தால் அது ஷைத்தானை கோபமூட்டச் செய்யும் எனக் கூறு கின்றார்கள்(முஸ்லிம்).

**ஷைத்தானின் முடிச்சுகள்.**

ஒரு மனிதன் உறங்கிக் கொண்டிருக்கும்போது அவனிடம் ஷைத்தான் வந்து உறக்கத்திலே ஆர்வமூட்டி மூன்று முடிச் சுக்களைப் போட்டு விடுகின்றான். அவ்வாறு முடிச்சுப் போடப் பட்ட மனிதன் உறக்கத்திலிருந்து விழிக்க முயற்சிக்கும் போதெல்லாம், ஷைத்தான் அவனை விழிக்கவிடாது தடுத்து விடுகின்றான். நபி (ஸல்) அவர்கள் கூறியதை அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், உங்களில் ஒருவர் உறங்கிவிட்டால் அவரது பிடரியில் ஷைத்தான் வந்தமர்ந்து மூன்று முடிச்சுக்க ளைப் போட்டு விடுகின்றான். அவன் போடும் ஒவ்வொரு முடிச் சிலும் இன்றைய இரவு நீண்ட இரவாகயிருப்பதால் உறங்கிக் கொண்டேயிரு எனக் கூறியவனாக அதிலே ஊதி விடுகின்றான். அவ்வாறு முடிச்சுப் போடப்பட்ட மனிதன் உறங்கி எழும்போது ஓதக்கூடிய திக்ரை ஓதியவனாக எழுந்தால் முதலாவது முடிச் சும், பின் சுபஹுத் தொழுகைக்காக வுழு செய்தால் இரண்டா

வது முடிச்சும், பின் சுபுஹூத் தொழுகையை நிறைவேற்றினால், மூன்றாவது முடிச்சும் அவிழ்க்கப்பட்டு காலையில் உற்சாகமானவனாகவும், தூய உள்ளம் படைத்தவனாகவும் எழுகின்றான். மேற்கூறப்பட்ட முறையின்றி எழுந்தால் அவன் அன்றைய தினம் சோம்பேரியாகவும், தீய உள்ளம் கொண்டவனாகவும் எழும்புகின்றான் எனக் கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

- அல்லாஹ்விடமே தனது அனைத்துக் காரியங்களுக்கும் பாதுகாப்புத்தேட வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான். உங்களைவிட்டு ஷைத்தானுடைய அசுத்தத்தை(தீய ஊசலாட்டத்தை)ப் போக்கி விடுவதற்காகவும், உங்கள் இதயங்களைப் பலப்படுத்தி அதைக் கொண்டு உங்கள் பாதங்களை உறுதிப் படுத்துவதற்காகவும் அவனே வானத்திலிருந்து உங்கள்மீது மழையையும் இறக்கிவைத்தான்(8.11). மேலும் அல்லாஹ்தான் மனிதனை ஷைத்தானுடைய சூழ்ச்சிகளில் வீழ்ந்து விடாது காப்பாற்றுகின்றான். அவ்வாறு அல்லாஹ்வே அவன்மீது அன்பு கொண்டு அவனைப் பாதுகாக்கும்போது அம்மனிதன் தனது அனைத்து காரியங்களையும், அவனிடமே முறையிட்டு அவனிடமே பாதுகாப்புத்தேடி, அவனிடமே சரணடையவும் வேண்டும். அப்போதுதான் அந்த விரோதியின் தீய சூழ்ச்சிகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.
- அல்லாஹ்வைப் அஞ்சி நடந்துகொள்ள வேண்டும். எனவே ஷைத்தானுடைய கெடுதிகளையும், சூழ்ச்சிகளையும் விட்டு மனிதனைப் பாதுகாப்பதில் அல்லாஹ்வுக்குப் பயந்து நடத்தல் முதன்மையிடத்தை வகிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே நீங்கள் பொறுமையுடனிருந்து, (அல்லாஹ்வை) பயந்தும் கொள்வீர்களாயின் அவர்களுடைய சூழ்ச்சி உங்களுக்கு யாதொரு தீங்கையும் விளைவித்து விடாது(3.120). மேலும் அல்லாஹ் பயபக்தியாளர்களுடன்

இருக்கின்றான் என்பதை பின்வருமாறு கூறுகின்றான். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையவர்களாக இருக்கிறார்களே அத்தகையோருடனும், நன்மைகள் செய்கிறார்களே அவர்களுடனும் (உண்மையாகவே) இருக்கின்றான்(*16.128*).

மேற்கூறப்பட்ட திருவசனத்தின் பிரகாரம் யாருடன் அல்லாஹ் இருக்கின்றானோ அவனை ஷைத்தானுடைய, ஜின்னுடைய எந்தத் தீங்குகளும் அல்லாஹ்வின் ஏற்பாட்டைக் கொண்டேதவிர நெருங்க மாட்டாது. மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், அல்லாஹ்வுக்கு நீ கட்டுப்பட்டு நடந்தால் அவன் உன்னைப் பாதுகாப்பான். அவனுக்கு நீ கட்டுப்படும்போது அவனை நீ உன்னிடத்தில் பெற்றுக் கொள்கின்றாய் எனக்கூறினார்கள்(திர்மிதி). மேலும் பயபக்தியுடையவர்கள்தான் ஷைத்தானினதும், ஜின்னினதும் கெடுதிகளை விட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள். அத்துடன் ஈருலகிலும் பூரண வெற்றியையும், மனத்திருப்தியையும் பெற்றவர்களுமாகும். அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே (நபியே! கஷ்டங்களைச் சகித்துப்) பொறுமையுடனிருப்பீராக!. நிச்சயமாக(நல்ல) முடிவு பயபக்தியுடையவர்களுக்காகும்(*11.49*).

- ஷைத்தானுடைய தீங்குகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிக்கொள்ள வேண்டும். ஷைத்தானுடைய தீங்குகளை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிக் கொள்ளுமாறு குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹ் கூறிக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். ஷைத்தானிலிருந்து ஓர்(சிறிய)ஊசலாட்டம் உமக்கு நிச்சயமாக ஊசலாடுமானால், அல்லாஹ்வைக் கொண்டு நீர் காவல் தேடிக் கொள்வீராக! நிச்சயமாக அவன் செவியுறுகிறவன் (யாவையும்) நன்கறிகிறவன்(*7.200*). மேலும் கூறுகின்றான்.(நபியே!) நீர் கூறுவீராக! மனிதர்களின் இரட்சகனிடம் நான் (பாது) காவல் தேடுகிறேன். (அவன்தான்) மனிதர்களின் அரசன்.

(அவனே) மனிதர்களின் (வணக்கத்திற்குரிய) நாயன். பின்னால் பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களைக் கிளப்பக் கூடியவ(னான ஷைத்தா)னின் தீங்கை விட்டும்(நான் பாதுகாவல் தேடுகிறேன்). அவன் எத்தகையவனென்றால், மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களைக் கிளப்பி விடுகிறான். (இத்தகையோர்) ஜின்களில் மற்றும் மனிதர்களில் இருக்கின்றனர்(114.1–6). மேலும் கூறுகின்றான். இன்னும் என் இரட்சகனே! ஷைத்தானுடைய தூண்டுதல்களிலிருந்து நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன் என்றும் (நபியே!) நீர் கூறுவீராக! என் இரட்சகனே! இன்னும் அவை (என் காரியங்களில்) பிரசன்னமாகாதிருக்கவும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன் (என்றும் நபியே! நீர் பிரார்த்தித்துக் கூறுவீராக!)(23.97–98).

**பாதுகாப்புத் தேடவேண்டிய இடங்கள்.**

அன்பார்ந்த சகோதரர்களே!

ஷைத்தான் மனித சமுதாயத்தை வழிகெடுக்க அவனது சூழ்ச்சிகளை பலவழிகளில் கட்டவிழ்த்து விடுவதால், அவைகளிலிருந்து நாம் நம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்? என்ற அடிப்படையில் நபி (ஸல்) அவர்கள் நமக்கு பல வழிமுறைகளைக் கற்றுத் தந்துள்ளார்கள். அவைகளை நாமும் அறிந்து அதன்படி செயல்பட்டு அவனது சூழ்ச்சிகளிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவைகளில் சிலதை முன் வைக்கின்றேன்.

**தொழுகையில்.**

உஸ்மான் பின் அபில்ஆஸ் (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், அவன்தான் ஹின்ஸப் எனப்படும் ஷைத்தானாகும். அவன் உன்னில் குழறுபடி செய்கின்றான் என்பதை நீ உணர்ந்தால், அல்லாஹ்விடம் பாதுகாப்புத்தேடி உனது இடது புறத்தால் மூன்றுமுறை துப்பிக்கொள்

என்றார்கள் (முஸ்லிம்). மேலும் நபி (ஸல்) அவர்கள் தொழுவதைக் கவனித்துக் கொண்டிருந்த ஜுபைர் பின் முத்இம் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நபியவர்கள் தொழும்போது அல்லாஹு அக்பர் கபீரன் என மூன்று முறையும், அல்ஹம்து லில்லாஹி கஸீரன் என மூன்று முறையும், சுப்ஹானல்லாஹி புக்ரதன் வஅஸீலா என மூன்று முறையும், அஊது பில்லாஹி மினஷ்ஷைத்தானி, மின் நப்கிகி, வனபஸிஹி, வஹமஸிஹி எனவும் கூறிக் கொள்வார்கள்(அபூதாவுத்).

**குர்ஆன் ஓதகையில்.**

அல்லாஹ் கூறுகின்றான். (நபியே!) நீர் குர்ஆனை ஓத ஆரம்பித்தால் விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ் விடம் காவல் தேடிக்கொள்வீராக!(16.98).

**மலசலக்கூடத்துக்குச் செல்லுகையில்.**

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நபி (ஸல்) அவர்கள் மலசலக் கூடத்துக்கு செல்ல முற்படும்போது, அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் குப்ஸி வல் கபாஇஸி எனக் கூறிக்கொள்வார்கள் எனக்கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

**கோபம் மேலிருகையில்.**

சுலைமான் பின் சர்த் அவர்கள் கூறுகையில், நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, இரு மனிதர்கள் ஏசிக் கொண்டார்கள். அவர்களில் ஒருவர் முகம் சிவந்தவராக மற்றவரை ஏசிக் கொண்டிருந்தார். அப்போது நபியவர்கள் நான் ஒரு வார்த்தையை அறிவேன். அவர் அவ்வார்த்தையை கூறினாரென்றால் அவருடைய கோபம் தணிந்துவிடும் எனக்கூறிவிட்டு, அவ்வார்த்தை அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் என்பதாகும் என்றார்கள் எனக்கூறினார்கள்(புகாரி,முஸ்லிம்).

**காலை, மாலையில்.**

நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்து அபூபக்ரே! நீ காலையிலும், மாலையிலும் பின்வரும்

துஆவை ஓதிப் பிரார்த்தித்துக்கொள் எனக்கூறி பின்வரும் துஆவை கற் றுக் கொடுத்தார்கள். அல்லாஹும்ம பாதிரஸ் ஸமாவாத்தி வல் அர்ழ், ஆலிமல் கைபி வஷ்ஷஹாததி, லாஇலாஹ இல்லா அன்த, றப்பு குல்லி ஷைஇன் வமலீக்குஹு, அஊது பிக மின் ஷர்ரி நப்ஸீ, வமின் ஷர்ரிஷ் ஷைத்தானி வஷிர்கிஹி, வஅன் அக்தரிப அலா நப்ஸீ சூஅன் அவ் அஜுர்ரஹு இலாமுஸ்லிம் (திர்மிதி). மேலும் அப்துல்லாஹ் பின் ஹபீப் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், எங்களுக்குத் தொழுகை நடத்துவதற்காக கடும் இருளும், மழையுமாயிருந்த தோர் நாளில் நபி (ஸல்) அவர்களைத் தேடிச் சென்று ஓரிடத்தில் அவரைப் பெற்றுக் கொண்டோம். அப்போது அவர் என்னிடம் ஓதுவாயாக! என் றார்கள். அதற்கு நான் பதிலேதும் கூறவில்லை. மீண்டும் ஓதுவாயாக! என்றார்கள். அதற்கும் நான் ஒன்றும் கூறவில்லை. மீண்டும் அவ்வாறே அவர்கள் கூற அதற்கு நான் என்ன ஓத வேண்டும் எனக்கேட்டேன்? அதற்கவர்கள் குல்ஹுவல்லாஹு அஹதையும், குல்அஊது பிறப்பில் பலக்கையும், குல்அஊது பிறப்பின் நாஸையும் காலை யிலும், மாலையிலும் மூன்றுமுறை ஓதிவருவாயாக! அவ்வாறு நீ ஓதிவந்தால் அவை உன்னை அனைத்து தீங்குகளிலி ருந்தும் பாதுகாக்கும் எனக் கூறினார்கள் என அறிவிக்கின் றார்கள்(அபூதாவுத்,திர்மிதி,நஸயீ,இப்னுமாஜஹ்).

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், யார் பிஸ் மில்லாஹில்லதீ லா யழுர்ரு மஅஸ்மிஹி ஷைஉன் பில் அர்ழி வலா பிஸ்ஸமாஇ வஹுவஸ் ஸமீஉல் அலீம் என மூன்று முறை ஓதிக்கொள்கின்றாரோ, அவர் காலையில் எழும்பும் வரை அவரை எந்தத்தீங்கும் திடீரெனத் தாக்காது. அதனை யார் காலையில் ஓதிக் கொள்கின்றாரோ, அவரை மாலைவரை எந்தத் தீங்கும் திடீரெனத் தாக்காது எனக்கூறுகின்றார்கள் (அபூதாவுத், திர்மிதி,நஸயீ,இப்னுமாஜஹ்). மேலும் அபூஹுரைரா (ரலி) அவர் கள் அறிவிக்கையில், அபூபக்ர் (ரலி) அவர்கள் நபி (ஸல்)

அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! நான் காலையிலும், மாலையிலும் ஓதிவரக்கூடிய ஒன்றை கற்றுத் தாருங்கள் எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் அல்லாஹும்ம பாதிரஸ் ஸமாவாத்தி வல்அர்ழ், ஆலிமல் கைபி வஷ்ஷஹாததி, றப்ப குல்லி ஷைஇன் வமலீகஹு, அஷ்ஹது அன்லா இலாஹ இல்லா அன்த, அஊது பிக மின் ஷர்ரி நப்ஸீ வஷர்ரிஷ் ஷைத்தானி வஷிர்கிஹி என்பதனை காலையிலும், மாலையிலும், உறங்கச் செல்லும் போதும் ஓதிக்கொள் என்றார்கள். எனக் கூறுகின்றார்கள்(அபூதாவுத்,திர்மிதி).

**ஓரிடத்தில் குடியிருக்க நேருகையில்.**

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக கவ்லத் பின்த் ஹகீம் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், யார் ஒரு வீட்டில் குடியிருக்கச் செல்லும்போது அஊது பிகலிமாத்தில் லாஹித் தாம்மாத்தி மின் ஷர்ரி மா கலக் எனக்கூறிக் கொள்கின்றாரோ, அவ்வீட்டிலிருந்து அவர் வெளியேறும்வரை அவரை எத்தீங்கும் நெருங்க மாட்டாது எனக்கூறுகின்றார்கள்(முஸ்லிம்). மேற்கூறப்பட்ட திக்ரை எந்த இடத்தில் நாம் தங்க நேரிட்டாலும் ஓதிக்கொள் வதுடன், குழந்தைகளுக்கும் மனனமிடக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

**கழுதை, நாயினது சத்தம் கேட்கையில்.**

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நீங்கள் சேவல் கூவும் சத்தத்தைக் கேட்டால், அல்லாஹ்விடம் அருளை வேண்டிக் கொள்ளுங்கள். ஏனெனில் அது மலக்குகளைக் காணும் போதுதான் அவ்வாறு கூவுகின்றது. மேலும் கழுதை கத்தும் சத்தத்தைக் கேட்டால், ஷைத்தானின் தீங்குகளை விட்டும் பாதுகாப்புத் தேடிக் கொள் ளுங்கள். ஏனெனில் அது ஷைத்தானைக் காணும்போதுதான் அவ்வாறு கத்துகின்றது என்றார்கள்(புகாரி,முஸ்லிம்). மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறி விக்கையில், நீங்கள் இரவில் நாயினதோ, கழுதையினதோ சத்தத்

தைக் கேட்டால், அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிக் கொள்ளுங்கள்.உங்களால் பார்க்க முடியாதவைகளை அவைகள் பார்க்கின்றன எனக்கூறுகின்றார்கள்(அஹ்மத்,அபூதாவுத்).

**தனது கொள்கையில் சந்தேகம் ஏற்படுகையில்.**

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், ஷைத்தான் உங்களிடம் வந்து இதனை யார் படைத்தது? இதனை யார் படைத்தது? என வினா எழுப்பி கடைசியில் அல்லாஹ்வை யார் படைத்தது? என்ற வினாவுக்கு வந்து விடுவான். அந்நிலைக்கு நீங்கள் வந்து விட்டதை உணர்ந்தால், அதிலிருந்து தன்னைப் பாது காக்குமாறு அவனிடம் பாதுகாப்புத் தேடிக்கொள்ளுங்கள் என்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

**உடலுறவில் ஈடுபடுகையில்.**

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், உங்களில் ஒருவர் தனது மனைவியுடன் உடலுறவு கொள்ள விரும்பினால், பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம ஜன்னிப்னஷ் ஷைத்தான வஜன்னிபிஷ் ஷைத்தான மாறஸக்தனா எனக் கூறிக்கொள்ளட்டும். அவ்வாறு பிரார்த்தித்து உடலுறவு கொண்டு குழந்தையும் தரித்து விட்டால், அக்குழந்தைக்கு ஷைத்தானால் எவ்வித தீங்கையும் ஏற்படுத்த முடியாது எனக்கூறினார்கள்(புகாரி,முஸ்லிம்).

**உறங்கச் செல்லுகையில்.**

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நபி (ஸல்) அவர்கள் உறங்கச் செல்லும்போது தனது இரு கைகளில் ஊதிவிட்டு, பின்பு பாதுகாப்புக்குரிய சூராக்களான குல்ஹுவல்லாஹு அஹத், குல்அஊது பிறப்பில் பலக், குல்அஊது பிறப் பின்னாஸ் போன்ற சூராக்களையும் ஓதி ஊதி, தனது உடம்பு முழுவதும் தடவிக் கொள்வார்கள் எனக்கூறுகின்றார்கள்(புகாரி).

**கெட்ட கனவு காணுகையில்.**

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூகதாதா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், மனிதன் காணும் நல்ல கனவு அல்லாஹ்விடத்திலிருந்தும், கெட்டகனவு ஷைத்தானிடத்திலிருந்தும் உள்ளதாகும். எனவே ஒருவர் தான் வெறுக்கும் கனவைக் கண்டால், ஷைத்தானை விட்டும் பாதுகாப்புத்தேடி இடது புறத்தால் துப்பிக் கொள்வதுடன், அதனை யாரிடமும் கூறவும் வேண்டாம். அவ்வாறு செய்தால் அவருக்கு அதன்மூலம் எவ்வித இடரும் நேராது. மேலும் நல்லதோர் கனவைக் கண்டால் அதனை தன்னுடன் அன்பாய் இருப்போரிடம் மாத்திரமே கூறிக் கொள்ளவும் எனக்கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

**அல்லாஹ்வை தியானிக்கையில்.**

அல்லாஹ்வை திக்ர் செய்வது மனிதன் ஷைத்தானிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்குரிய முக்கிய கேடயமாகும். அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே நீங்கள் என்னை நினைவு கூறுங்கள். நானும் உங்களுக்கு (அருள்புரிந்து) நினைவு கூறுவேன்(2.152). மேலும் எவன் அல்லாஹ்வை திக்ர் செய்து தியானிக்கின்றானோ அல்லாஹ் அவனுக்கு எல்லா வகைகளிலும் உதவிசெய்து கவலை, துன்பம் மற்றும் தீயவைகளிலிருந்து அவனைப் பாதுகாத்துக் காப்பாற்றுகின்றான்.

அல்லாஹ்வை தியானிப்பவனே!

நீ அல்லாஹ்வை தியானிக்கும்போது உனக்கு எவ்வித துன்பமும், கவலையும் நெருங்காமல் உனக்கு உதவியாயிருந்து உன்னை அவன் பாதுகாத்துக் கொள்கின்றான். நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஹாலித் அல் அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கையில், அல்லாஹுத்தஆலா யஹ்யா(அலை) அவர்களுக்கு ஐந்து விஷயங்களைக் கற்றுக் கொடுத்து அவைகளை அவரும், அவரது சமுதாயமான பனூ இஸ்ரவேலர்களும் செய்து வருமாறு கட்டளையிட்டான். அவைகளில் ஒன்று நீங்கள் அல்லாஹ்வை அதிகம் தியானித்துக் கொள்ளும்

படி உங்களை ஏவுகின்றேன் என்பதாகும். அவ்வாறு தியானிப்ப தற்குரிய உதாரணம்: ஒரு மனிதன் தனது எதிரியை துரத்திக் கொண்டு ஓடி வரும்போது அவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு பாதுகாப்பான கோட்டைக்குள் நுழைந்து கொண்டவனைப் போன்றாகும். அதேபோன்றுதான் ஒரு அடியான் அல்லாஹ்வின் தியானத்தில் இருக்கும்போது ஷைத்தானுடைய தீங்குகளை விட்டும் பாதுகாக்கப்படுகின்றான் எனக் கூறுகின்றார்கள்(அஹ்மத்,திர்மிதி).

அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் நம்முடைய அனைத்துக் காரியங்களிலும் மலசலக்கூடத்தில் நுழை வதாயிருந்தாலும் சரி, அதிலிருந்து வெளியேறுவதாயிருந்தாலும் சரி, மனைவியுடன் உடலுறவு கொள்வதாயிருந்தாலும் சரி அல்லாஹ்வை திக்ர் செய்து கொள்ளுமாறு பணித்துள்ளார்கள். அதிலே கவனயீனமாயிருக்கும் போதுதான் ஷைத்தானுடைய ஊசலாட்டங்களும், ஜின் தொட்டுக்கொள்வது போன்ற இன்னோரன்ன விஷயங்களும் இடம்பெறுகின்றன.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், ஒரு மனிதர் தனது வீட்டுக்குள் நுழையும் போதும், உண்ணும் போதும் பிஸ்மிச் சொல்லிக் கொண்டால், ஷைத்தான் தனது கூட்டத்தினரைப் பார்த்து நமக்கிங்கு வீடுமில்லை, உணவுமில்லையெனக் கூறிக் கொண்டு வெளியேறுகின்றான். அவர் வீட்டினுள் நுழையும் போது பிஸ்மிச் சொல்லாது நுழைந்தால், ஷைத்தான் அவனது கூட்டத்தினரிடம் நீங்கள் வீட்டைப் பெற்றுக் கொண்டீர்கள் எனக் கூறுகின்றான். உணவு உண்ணும் போதும் பிஸ்மிச் சொல்ல வில்லையாயின் நீங்கள் வீட்டையும், உணவையும் பெற்றுக் கொண்டீர்கள் எனக் கூறுகின்றான் எனக்கூறுகின்றார்கள்(முஸ்லிம்).

மேலும் ஹுதைபா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நாம் நபி (ஸல்) அவர்களுடன் உட்கார்ந்திருக்கும்போது உணவு

வந்தால், நபியவர்கள் ஆரம்பிக்கும் வரை நமது கைகளை அவ்வுணவுத் தட்டிலே நுழைக்க மாட்டோம். ஒருமுறை நாம் அவருடன் உணவு உற்கொள்வதற்காக உட்கார்ந்திருந்த போது ஒரு பெண் குழந்தை வந்து நமக்கு வைக்கப்பட்டிருந்த உணவுத் தட்டிலே கையைவிட முயற்சித்தது. உடனே நபியவர்கள் அவளது கையை தடுத்து விட்டார்கள். பின்பு ஒரு நாட்டுப்புற வாசியொருவர் வந்து அதனுள் தனது கையைவிட முயன்றார். அதனையும் நபியவர்கள் தடுத்துவிட்டு பின்வருமாறு கூறினார்கள். அல்லாஹ்வின் பெயர் கூறப்படாமல் உற்கொள்ளப்படுகின்ற உணவை ஷைத்தான் தனக்குரியதாக ஆக்கிக் கொள்கின்றான். அவன் இவ்வுணவையும் தனக்குரியதாக ஆக்கிக் கொள்ள இந்தப் பெண்ணை அழைத்து வந்தான். ஆனால் நான் அதனைத் தடுத்து விட்டேன். பின்பு இந்த நாட்டுப் புறவாசியை அழைத்து வந்தான். அவரையும் நான் தடுத்து விட்டேன். அல்லாஹ்வின் மீதாணையாக இக்குழந்தையின் கையை நான் தடுக்கையில் அவனுடைய கையும், அவளுடைய கையுடன் சேர்ந்திருப்பதை உணர்ந்தேன் என்றார்கள் எனஅறிவிக்கின்றார்கள்(முஸ்லிம்).

நம்முடைய உணவில் ஷைத்தானுக்கும் பங்குபோகாமல் பின்வரக்கூடிய முறையில் பாதுகாத்துக் கொள்ளலாம். நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நீங்கள் உண்ணும்போது உங்களது கையிலிருந்து உணவு விழுந்து விட்டால் அதனை எடுத்து கழுவி உண்ணுங்கள். அதனை ஷைத்தானுக்கு விட்டு விடாதீர்கள் என்றார்கள் என அறவிக்கின்றார்கள் (முஸ்லிம்).

**குர்ஆன் ஓதுகையில்.**

குர்ஆன் ஓதுவதும் தன்னை ஷைத்தானின் தீங்குகளை விட்டும் பாதுகாத்துக் கொள்வதற்குரிய முக்கிய வழியாகும். அல்லாஹ் கூறுகின்றான். மேலும் (நபியே) நீர் குர்ஆனை ஓதினால் உமக்கும், மறுமையை நம்பிக்கை கொள்ளாதோருக்கு

மிடையில் மறைக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு திரையை நாம் ஆக்கி விடுகிறோம். மேலும் அவர்களுடைய இதயங்களின்மீது அதனை அவர்கள் விளங்கிக் கொள்ள முடியாதவாறு திரைகளையும் (அமைத்து) அவர்களுடைய காதுகளில் அடைப்பையும் ஆக்கிவிடுகின்றோம். மேலும் குர்ஆனில் உம்முடைய இரட்சகனை (மட்டும் அவர்களின் கூட்டுக்காரர்களைத் தவிர்த்து) அவனைத் தனித்தவனாக நீர் கூறினால் அவர்கள் வெறுப்படைந்து தங்கள் பின்புறங்களில் (திரும்பிச்) சென்று விடுகின்றனர்(17.45–46).

அல்குர்ஆன் மக்களை நேர்வழியின் பக்கமும், ஈமானின் பக்கமும் அழைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் நமது விரோதியான ஷைத்தான் அதற்கு செவிமடுப்பதை விட்டும் நம்மைத்தடுக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். மேலும் நிராகரித்து விட்டார்களே அத்தகையோர் (மற்றவர்களிடம்) நீங்கள் இந்தக் குர்ஆனை கேட்காதீர்கள் (அது ஓதப்படும்போது மற்றவர்கள் கேட்காதிருக்க) அதில் (கூச்சலிடுவது போன்ற) வீணானவற்றையும் செய்யுங்கள். நீங்கள் (அதனால்) மிகைத்து விடலாம் என்றுகூறினர்(41.26).

மேற்கூறப்பட்டவைகளில் ஷைத்தானும் அவன் வழிநடப்பவர்களும் ஈடுபடுவதனால்தான் இக்குர்ஆன் அவர்களின் உள்ளத்திலே அல்லாஹ்வுக்கு மாறுசெய்யும் தன்மையையும், தற்பெருமையடிப்பதையும் அதிகரிக்கச் செய்து அவர்களை மென்மேலும் நஷ்டத்திலும், கஷ்டத்திலும் கொண்டுபோய் சேர்க்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். விசுவாசங் கொண்டோருக்கு எது குணப்படுத்துமோ அதையும், இன்னும் அருளையும் இந்தக் குர்ஆனிலிருந்து நாம் இறக்கி வைக்கிறோம். இன்னும் அக்கிரமக்காரர்களுக்கு இது நஷ்டத்தையே தவிர (வேறெதையும்) அதிகமாக்காது(17.82).

ஒரு மனிதன் குர்ஆன் ஓதுவதை ஷைத்தான் வெறுப்பதுடன், அதனை அவன் ஓதும்போது ஷைத்தானால் அக்குர்

ஆனை செவிமடுக்க முடியாமல் விரண்டோடுகின்றான் என்பதை நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், நீங்கள் உங்கள் வீடுகளை கப்றுகளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். சூரத்துல் பகரா எந்த வீட்டில் ஓதப்படுகின்றதோ அவ்வீட்டிலிருந்து ஷைத்தான் விரண்டோடுகின்றான் எனக் கூறுகின்றார்கள் (முஸ்லிம்). மேலும் கூறுகையில், யார் இரவில் சூரத்துல் பகரா வின் கடைசி இரு ஆயத்துக்களையும் ஓதுகின்றாரோ அவ் விரண்டும் அவரை ஷைத்தானின் தீங்குகளை விட்டும் பாது காக்கும் எனக்கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

**ஆயத்துல் குர்ஷியின் சிறப்பு.**

உறங்கும்போது ஆயத்துல் குர்ஷியை ஓதிக் கொண்டு உறங்குவதைப்பற்றி வந்திருக்கும் ஹதீஸை அபூஹுரைரா (ரலி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள். றமழான் மாதத்தில் ஸகாத் பொருட்களைத் திரட்டி வருமாறு நபி (ஸல்) அவர்கள் என்னைப் பணித்தார்கள். அவர்களது கட் டளைக்கிணங்க நானும் அப்பொருட்களை மக்களிடமிருந்து திரட்டிக் கொண்டிருக்கும்போது, ஒரு மனிதன் வந்து நான் திரட்டிய பொருட்களிலிருந்து சிலதை எடுத்துக் கொண்டான். உடனே நான் அவனைப்பிடித்து நீ இப்பொருளிலிருந்து எடுத்த குற்றத்துக்காக நான் உன்னை நபியவர்களிடம் கொண்டு செல்வேன் எனக்கூறினேன். அதற்கவன் நான் ஒரு குடும்பஸ்தன். நான் மிகவும் கஷ்டத்திலிருக்கின்றேன் என்னை விட்டுவிடு எனக்கூறினான். அதைக்கேட்ட நான் அவன் மீது பரிதாபப்பட்டு அன்று அவனை விட்டுவிட்டேன். மறுநாள் காலையில் நபியவர்கள் என்னிடம் நேற்றைய உனது கைதி என்ன செய்தான்? என வினவினார்கள். அதற்கு நான் அல்லாஹ் வின் தூதரே! அவன் ஒரு குடும்பஸ்தனும், கஷ்டங்கள் நிறைந்தவனும் எனக்கூறினான். அவன்மீது பரிதாபப்பட்டு அவனை விட்டுவிட்டேன் என்றேன். அதற்கவர் அவன் உன்னி டம் பொய் கூறியிருக்கின்றான். நாளையும் அவன் வருவான்

எனக் கூறினார்கள். நபியவர்கள் மீண்டும் வருவான் எனக்கூறிய தால் அவன் மீண்டும் வருவான் என்பதை அறிந்து மறுநாள் அவன் வருகின்றானா? எனக்கவனித்துக் கொண்டிருந்தேன். அவன் அன்றும் வந்து உணவுப் பொருட்களில் சிலதை எடுக்க ஆரம்பித்தான். உடனே அவனைப் பிடித்து இன்று உன்னை நிச்சயமாக நபியவர்களிடம் ஒப்படைக்கப் போகின்றேன் எனக்கூறினேன். அதற்கவன் நான் ஒரு குடும்பஸ்தன், மிகவும் கஷ்டத்தில் இருக்கின்றேன் என்னை விட்டுவிடு இதன்பிறகு வரமாட்டேன் எனக்கூறினான். அவன் இம்முறை உண்மைதான் கூறுகின்றான் என நினைத்து அன்றும் விட்டுவிட்டேன். மறு நாள் காலையில் நபி (ஸல்) அவர்கள் என்னிடம் நேற்றைய உனது கைதி என்ன செய்தான்? என வினவினார்கள். அதற்கு நான் அவன் குடும்பஸ்தனும், கஷ்டங்கள் நிறைந்தவனும் எனக் கூறி இதன்பிறகு வரமாட்டேன் என வாக்குறுதியளித்தான். அதனால் அவனை நான் விட்டுவிட்டேன் எனக்கூறினேன். அதற்கவர் அவன் பொய்யன் நாளையும் வருவான் எனக்கூறி னார்கள். மூன்றாவது முறையும் அவனை உன்னிப்பாகக் கவ னித்தேன். அன்றும் அவன் வந்து உணவுப் பொருளில் சிலதை அள்ளி எடுத்துக் கொண்டிருந்தான். உடனே அவ னைப் பிடித்து இதன்பிறகு வரமாட்டேன் எனக்கூறி விட்டு மீண்டும் வந்திருக்கின்றாய். இம்முறை உன்னை நபியவர்களி டம் ஒப்படைத்தே தீருவேன் எனக்கூறினேன். அதற்கவன் உனக்கு அல்லாஹ்விடமிருந்து நன்மையைப் பெற்றுத்தரக் கூடிய சில வார்த்தைகளைக் கற்றுத் தருகின்றேன் என்னை விட்டுவிடு எனக்கூறினான். அதற்கு நான் அவை எவை? என வினவினேன். அதற்கவன் நீ உறங்கச் செல்லும்போது ஆயத் துல் குர்ஷியை ஓதிக்கொள். அப்படி ஓதினால் நீ காலையில் எழும்பும்வரை எந்த ஷைத்தானும் உன்னிடம் நெருங்காமல் மலக்குகளில் ஒருவர் உன்னைப் பாதுகாத்துக் கொண்டிருப் பார் எனக்கூறினான். அன்று அவன் அந்த நற்கிரிகையை கற்

றுத் தந்ததால் அவனை விட்டுவிட்டேன். மறுநாள் காலையி லும் நபியவர்கள் நேற்றைய உனது கைதி என்ன செய்தான்? என வினவினார்கள். அதற்கு நான் அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்விடம் நன்மையை பெற்றுத் தரக்கூடிய சில வார்த் தைகளை அவன் எனக்குக் கற்றுத் தருவதாகக்கூறி அவை களை கற்றுத்தர நான் அவனை விட்டுவிட்டேன் எனக்கூறி னேன். அதற்கு நபியவர்கள் அவைகள் யாவை? என வின வினார்கள். அதற்கு நான், நான் உறங்கச் செல்லும்போது ஆயத்துல் குர்ஷியை கடைசிவரை ஓதிக்கொண்டால் காலை யில் எழும்பும்வரை எந்த ஷைத்தானும் என்னிடம் நெருங்கா மல் பாதுகாக்கக்கூடிய அல்லாஹ்வின் பாதுகாவலர் ஒருவர் என்னுடன் இருந்து கொண்டிருப்பார் எனக்கூறினான் என்றேன். (பொதுவாக நபித்தோழர்கள் நன்மையான விஷயங்களை அறிந்து கொள்ளவும், அவைகளை நடைமுறைப் படுத்தவும் மிகவும் ஆர்வமாக இருப்பார்கள்) அதற்கு நபியவர்கள் அவன் பொய்யன். என்றாலும் அவன் கூறியது உண்மையாகும் எனக் கூறிவிட்டு அபூஹுரைராவே! சென்ற மூன்று தினங்களாக உன் னுடன் உரையாடியவன் யார் தெரியுமா? என வினவினார்கள். அதற்கு நான் தெரியாதென்றேன். அதற்கவர்கள் அவன்தான் ஷைத்தான் என்றார்கள்(புகாரி).

**கோபம் மேலிடுகையில் வுழு செய்தல்.**

ஐஷத்தான் நெருப்பினால் படைக்கப்பட்டிருப்பதால் அவனை விரட்டுவதற்கும், அவனுடைய சூழ்ச்சிகளை அகற்று வதற்கும், அவனால் உருவாகும் கோபத்தை தணிப்பதற்கும் வுழுவுக்கு மிகுந்த சக்தியிருக்கின்றதென இஸ்லாம் கூறிக் கொண்டிருக்கின்றது. அது சம்பந்தப்பட்ட ஒரு அறிவிப்பை அபூவாயில் அல்காஸ் என்பவர் பின்வருமாறு அறிவிக்கின்றார் கள். நாம் உர்வத் பின் முஹம்மத் அஸ்ஸாஇதி என்பவரிடம் சென்றிருந்தோம். அப்போது அவருடனிருந்த ஒரு மனிதர் ஏதோ உரையாட அவருக்கு கோபம் மேலிட்டு விட்டது.

உடனே எழுந்து சென்று வுழு செய்துவிட்டு வந்து பின்வருமாறு கூறினார். நபி (ஸல்) அவர்கள் அறிவித்ததை எனது பாட்டனார் அதிய்யா அறிவிக்க, அதனை எனது தந்தை பின்வருமாறு கூறுகின்றார். நிச்சயமாக கோபம் ஷைத்தானின் மூலமே உருவாகின்றது. ஷைத்தான் நெருப்பினால் படைக்கப் பட்டிருக்கின்றான். நெருப்பு நீரினால்தான் அணைக்கப்படும். எனவே உங்களில் ஒருவருக்கு கோபம் ஏற்பட்டு விட்டால் அவர் வுழு செய்து கொள்ளட்டும் என்றார்கள்(அபூதாவுத்).

**பிழை பொறுக்கத் தேடுகையில்.**

அல்லாஹ் மனிதர்கள்மீது கொண்ட அளவு கடந்த கருணையினால் அடியார்கள் செய்யும் தவறுகளின் மூலம் ஷைத்தானுக்கு இரையாகி விடக் கூடாதென்பதற்காக அல்லாஹ் பாவ மன்னிப்பின் வாயிலை திறந்து வைத்திருக்கின்றான். எனவே பாவமன்னிப்புக் கோரும் அனைவரது பாவங்களையும் அவன் மன்னிக்கக் காத்துக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். மேலும் அவன் எத்தகையவனென்றால் தன் அடியார்களின் தவ்பாவை (பாவமீட்சியை) அவனே ஏற்றுக் கொள்கிறான். தீயவைகளை மன்னித்தும் விடுகின்றான். நீங்கள் செய்பவைகளையும் அவன் நன்கறிகிறான்(42.25).

ஆனால் அதற்கு மாறாக ஷைத்தானோ மனிதனை வழிகெடுத்து, அவனை மனோஇச்சைகளில் இட்டுச் செல்லவே முயன்று கொண்டிருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். மேலும் அல்லாஹ் உங்களது தவ்பாவை (பாவமன்னிப்பை) நாடுகின்றான். இன்னும் (முற்றிலும்) மனோ இச்சைகளைப் பின்பற்றி நடப்பவர்களோ, நீங்கள் (நேர்வழியிலிருந்து) முற்றிலும் சாய்ந்து விடுவதையே நாடுகின்றனர்(4.27).

மனிதன் ஷைத்தானின் சூழ்ச்சிகளால் பாவங்களில் ஈடுபடுவதால் தான்செய்த பாவக் கறைகளிலிருந்து தன்னை சுத்தப் படுத்திக் கொள்வதற்காகவே அல்லாஹ் பாவமன்னிப்பை அருளி, அதன்மூலம் ஷைத்தானை இழிவுபடுத்தியிருக்கின்றான். அல்

லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக (அல்லாஹ்வுக்குப்) பயப்படுகிறார்களே அத்தகையோர் அவர்களை ஷைத்தானுடைய (தவறான) எண்ணம் தொட்டால் அவர்கள்(அல்லாஹ்வை) நினைவு கூறிவிடுவார்கள். அதுசமயம் அவர்கள் (கண் திறந்து) விழிப்படைந்தவர்கள்(ஆவர்)(7.201).

நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கையில், ஷைத்தான் தனது இறைவனிடம் இறைவா! உனது கண்ணியத்தின் மீது ஆணையாக உனது அடியார்கள் உயிருடனிருக்கும் காலமெல்லாம் அவர்களை நான் வழிகெடுத்துக் கொண்டேயிருப்பேன் எனக்கூறினான். அதற்கு இறைவன் எனது கண்ணியத்தினதும், கீர்த்தியினதும் மீதாணையாக அவர்கள் செய்யும் பாவங்களுக்கு அவர்கள் பாவமன்னிப்புக் கோரும் காலமெல்லாம் அவர்களது பாவங்களை நான் மன்னித்துக் கொண்டேயிருப்பேன் எனக்கூறினான் எனக்கூறுகின்றார்கள்(அஹ்மத்,ஹாகிம்).

**வீடுகளை சுத்தமாய் வைத்திருத்தல்.**

நமது வீடுகளில் இஸ்லாம் தடுத்த உருவப்படங்கள், சிலைகள், நாய், இன்னிசைப்பாடல் போன்றவைகளை அனுமதிக்காது சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும். பின்வரும் திருவச னத்திலிருக்கும் கூப்பாடு என்ற சொல்லுக்கு முஜாஹித் (ரஹ்) அவர்கள் இன்னிசை என்றே விளக்கமளிக்கின்றார்கள். அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் அவர்களிலிருந்து (வழிதவறச் செய்ய) நீ சக்தி பெற்றிருக்கின்றவர்களை உன் கூப்பாட்டைக் கொண்டு வழிதவறச்செய்(17.64). மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், எனது சமுதாயத்திலே பிற்காலத்தில் விபச்சாரத்தையும், பட்டையும், மதுவையும், இன்னிசையையும் ஆகுமானதாகக் கருதக் கூடியவர்கள் உருவாகுவார்கள் எனக் கூறுகின்றார்கள்(புகாரி).

இசைகலந்த வீட்டு அழைப்பு மணிகளையும் நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், அழைப்பு

மணி ஷைத்தானின் வீணையாகும் எனக்கூறுகின்றார்கள் (முஸ்லிம்). மேலும் நபியவர்கள் கூறுகையில், மலக்குகள் நாயையும், அழைப்பு மணிகளையும் வைத்திருப்பவர்களை சேர்ந்து நடக்க மாட்டார்கள் எனக் கூறுகின்றார்கள்(முஸ்லிம்).

நாம் நமது வீட்டை பின்வரும் நபிமொழியின் பிரகாரமும் பாதுகாத்துக் கொள்ளலாம். நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நீங்கள் பிஸ்மிச் சொல்லி உங்கள் வீட்டு வாயில்களை அடைத்து விடுங்கள். ஏனெனில் மூடப்பட்ட எந்த வீட்டின் வாயிலையும் ஷைத்தான் திறக்க மாட்டான். மேலும் பிஸ்மிச் சொல்லி நீர்க் குவலைகளை மூடிவிடுங்கள். அல்லது பிஸ்மிச் சொல்லி ஒரு குச்சியை வைப்பதின் மூலமாவது உங்கள் பாத்திரங்களை மூடிவிடுங்கள். மேலும் உறங்கும்போது வீட்டு விளக்குகளையும் அனைத்து விடுங்கள் எனக்கூறுகின்றார்கள் (முஸ்லிம்).

நமது வீட்டில் அதிகமாக குர்ஆன் ஓதி, சுன்னத்தான தொழுகைகளை தொழுது கொள்வதின் மூலமாகவும் நமது வீட்டைப் பாதுகாத்துக் கொள்ளலாம். ஏனெனில் எந்த வீட்டில் குர்ஆன் ஓதப்படுகின்றதோ அவ்வீட்டிலிருந்து ஷைத்தான் விரண்டோடுகின்றான். அதனைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், ஒவ்வொரு பொருளுக்கும் முக்கியத்துவமிக்க ஒன்று இருந்து கொண்டேயிருக்கும். அதனடிப்படையில் குர்ஆனின் முக்கியத்துவமிக்கது சூரத்துல் பகராவாகும். ஒரு வீட்டில் சூரத்துல் பகரா ஓதுவதின் சத்தம் ஷைத்தானின் காதுகளுக்கு எட்டினால் அவ்வீட்டிலிருந்து விரண்டோடுகின்றான் எனக்கூறினார்கள்(ஹாகிம்).

**மனைவி, குழந்தைகளை பாதுகாக்கும் போது.**

மனைவியையும், குழந்தைகளையும் பாதுகாத்துக் கொள்ளும் முகமாக நபி (ஸல்) அவர்கள் சில துஆக்களை நமக்குக் கற்றுத் தந்திருக்கின்றார்கள். அவைகளில் சிலதைப் பார்ப்

போம். நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் அம்று பின் ஆஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். உங்களில் ஒருவர் ஒரு பெண்ணை திருமணம் செய்தாலோ, அல்லது ஒருவரை வேலைக்கு அமர்த்தினாலோ, அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க கைரஹா, வகைர மா ஜபல்தஹா அலைஹி, வஅஊது பிக மின் ஷர்ரிஹா வஷர்ரி மா ஜபல்தஹா அலைஹி எனக்கூறிக் கொள்ளட்டும்(அபூதாவுத்).

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நபி (ஸல்) அவர்கள் ஹசன், ஹுஸைன் போன்றோருக்கு பாதுகாப்புத் தேடிவிட்டு பின்வருமாறு கூறுவார்கள். உங்கள் இருவரது தந்தையுமான இப்றாஹீம் (அலை)அவர்கள் அவர்களது குழந்தைகளான இஸ்மாயில், இஸ்ஹாக் போன்றோருக்கு இதனைக் கொண்டே பாதுகாப்புத் தேடுவார்கள் எனக்கூறிவிட்டு, அவர்கள் பாதுகாப்புக்கோரி பிரார்த்தித்த அவ்வார்த்தையை பின்வருமாறு கூறினார்கள். அஊதுபிகலிமாத் தில்லாஹித் தாம்மத்தி, மின் குல்லி ஷைத்தானின் வஹாம்மஹ், வமின் குல்லி அய்னின் லாம் மாஹ்(புகாரி).

நமது குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையின் காதிலே பாங்கு ஓதி ஊதுவதின் மூலமும் நமது குழந்தையை பாதுகாத்துக் கொள்ளலாம். அபூராபி: அவர்கள் அறிவிக்கையில், அலி (ரலி) அவர்களின் மகன் ஹசனை பாத்திமா (ரலி) அவர்கள் பெற்றெடுத்தபோது அவரது காதிலே நபி (ஸல்) அவர்கள் பாங்கு ஓதி ஊதியதைக் கண்டேன் என்றார்கள் (அபூதாவுத், திர்மிதி).

இப்னு கையூம் (ரஹ்)அவர்கள் அறிவிக்கையில், குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையின் காதிலே பாங்கு சொல்வதின் நன்மை யாதெனில், அவ்வாறு பாங்கு சொல்லி அக்குழந்தையின் காதில் நாம் ஊதும்போது முதன் முதலாக அக்குழந்தையின் காதில் அல்லாஹ்வைப்பற்றிய வார்த்தைகள்தான் சென்றடைகின்றன. அதுமட்டுமின்றி குழந்தை பிறக்கும்போதே அக்

குழந்தையுடன் ஒட்டிக் கொள்வதற்கு தருணம் பார்த்திருக்கும் ஷைத்தானையும் அந்த பாங்கின் ஓசையின்மூலம் விரட்டி விடலாம். மேலும் இவனுடைய விஷயத்தில் தனது முதல் முயற்சியே வீணக்கடிக்கப்பட்டு விட்டதென்ற கவலையில் அவன் துடியாய் துடிக்கின்றான். மேலும் அவ்வாறு குழந்தை யின் காதில் பாங்கு சொல்லி ஊதுவது மற்றுமொரு கருத் தையும் கொடுக்கின்றது. ஷைத்தான் தன்பக்கம் அக்குழந் தையை அழைக்கமுன் நாம் அக்குழந்தையை அல்லாஹ்வின் பக்கமும், அவனது மார்க்கமான இஸ்லாத்தின் பக்கமும், அவனை வணங்கி வழிப்படுவதின் பக்கமும் அழைத்து விடு கின்றோம் எனக்கூறுகின்றார்கள். அதனுடைய உண்மை நிலை பற்றி அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன்.

குறிப்பாக ஷைத்தான் அலைந்து திரியும் நேரமான அந்தி சாயும் நேரங்களில் குழந்தைகளை பாதைகளில் அலைந்து திரிய விடாமலிருப்பதும் நமது குழந்தைகளை பாதுகாத்துக் கொள் ளும் முறைகளிலுள்ளதாகும். நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், அந்தி சாயும் நேரங்களிலும், இரவு நேரங்களிலும் உங்களது குழந்தை களை வெளியில் செல்லாமல் தடுத்துக் கொள்ளுங்கள். ஏனெ னில் அந்நேரங்களில்தான் ஷைத்தான் அலைந்து திரிகின்றான். இரவில் ஒரு குறிப்பிட்ட நேரம் சென்றபின் அவர்களை விட்டு விடுங்கள் எனக்கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

**பார்வையை தாழ்த்திக் கொள்ளல்.**

பொதுவாக ஷைத்தான் மனிதனுடைய பார்வையின் மூல மாக இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட பெண்களைப் பார்க்க வைத்து அதன்மூலம் பெரும் பிரச்சினைகள் உருவாக வழி வகுக்கின்றான். அதனால் நாம் பாதைகளிலும், மக்கள் குழு மிமிருக்கும் சந்தைகளிலும், பெண்களைப் பார்ப்பதை விட்டும் நமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். அலி (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நபி (ஸல்) அவர்கள் பழ்ல்

(ரலி) அவர்களை தனது வாகனத்தில் தனக்குப் பின்னால் வைத்துக் கொண்டு ஹஜ்ஜுடைய கடமைகளில் ஒன்றான கல்லை எறிவதற்காக கல்லெறியும் இடம்வரை வந்து அங்கே கல்லை எறிந்தார்கள். அப்போது கஸ்அம் எனும் குடும்பத்திலிருந்து ஒரு யுவதி வந்து, தனது தந்தைக்கு ஹஜ் செய்யக் கூடிய அனைத்து வாய்ப்பு வசதிகளும் இருக்கின்றது. ஆனால் அவரது வயோதிபத்தின் காரணத்தால் அவரால் அக்கடமையை நிறைவேற்ற முடியாமலிருக்கின்றார். எனவே அவரது அக்கடமையை அவருக்குப் பதிலாக நான் நிறைவேற்றட்டுமா? என வினவினாள். அதற்கு நபியவர்கள் ஆம் எனக்கூறிவிட்டு, அவளைப் பார்த்துக் கொண்டிருந்த பழ்ல் (ரலி) அவர்களின் தலையைத் திருப்பி விட்டார்கள். அதனைக் கண்ட அப்பாஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! பழ்லுடைய தலையை ஏன் திருப்பி விட்டீர்கள்? எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் ஒரு வாலிபனும், யுவதியும் சந்தித்துக் கொள்ளும்போது அவர்களுக்கிடையில் ஷைத்தான் குறிக்கிட்டு பிரச்சினையை ஏற்படுத்தி விடுவான் என்பதைப் பயந்தேன். அதனால்தான் அவ்வாறு செய்தேன் என்றார்கள்(அஹ்மத்,திர்மிதி).

நமது பார்வையை தாழ்த்திக் கொள்வதின் மூலமாக சந்தைபோன்ற ஆண், பெண் கலக்கும் இடங்களில் நாம் பார்க்கக் கூடாதவைகளையும் பார்க்காது தவிர்ந்து கொள்ளலாம். ஸல்மான் அல்பாரிஸி (ரலி) அவர்கள் அறிவிக்கையில், சந்தைக்குச் செல்பவர்களில் முதலாமவனாகவும், அதிலிருந்து திரும்புபவர்களில் கடைசியானவனாகவும் நீ இருக்காதே! ஏனெனில் அச்சந்தைதான் ஷைத்தானின் யுத்த களமாகும். அதிலேதான் அவனது கொடியையும் அவன் நட்டி வைக்கின்றான் என்றார்கள் (முஸ்லிம்).

**அந்நிய பெண்ணுடன் தனித்திருக்காதிருத்தல்.**

ஒருவன் அந்நிய பெண்ணைப் பார்க்கும்போதே ஷைத்தான் அவ்விடத்துக்கு சமூகமளித்து விடுகின்றான் என்றால், அவளு

டன் தனித்திருக்கும்போது அதனது நிலமை அதைவிட மோச மானதாயிருக்கும் என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதனைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், எந்தவொரு மனிதனும் அந்நிய எப்பெண்ணுடனும் தனித்திருக் கவோ, அல்லது அவளுடன் திருமணம் முடிக்க விலக்கப்பட்ட பருவ வயதடைந்த ஒரு ஆண் இருந்தே தவிர பிரயாணம் செய்யவோ வேண்டாம் எனக் கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்). மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் (ரலி) அவர் கள் அறிவிக்கையில், யார் அல்லாஹ்வையும், மறுமையையும் விசுவாசிக்கின்றாரோ அவர் ஒரு அந்நியப் பெண்ணுடன் பிரயா ணம் செய்ய நேரிட்டால், அவளுடன் திருமணம் முடிக்க விலக்கப்பட்ட ஒரு ஆண் இருந்தே தவிர பிரயாணம் செய்ய வேண்டாம். ஏனெனில் அவ்வாறு அவ்விருவரும் இருந்து கொண்டிருக்கும்போது அவர்களுடன் மூன்றாமவனாக ஷைத் தானும் இருக்கின்றான் எனக்கூறுகின்றார்கள்(அஹ்மத்).

மேலும் உபைதுர் ரஹ்மான் பின் ஸியாத் அவர்கள் அறி விக்கையில், மூஸா (அலை) அவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது ஷைத்தான் அவரிடம் வந்தான். அப் போது அவனிடம் மூஸா (அலை) அவர்கள், மனிதன் எத னைச் செய்யும்போது நீ அவனை மிகைத்து உனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருகின்றாய்? என வினவினார்கள். அதற்கவன் மனிதன் செய்யும் நற்கிரியைகள் அதிகரித்து அதன் மூலம் அவன் பெருமிதமடைந்து, அவன் செய்த பாவங்களை அவன் மறக்கும் போதுதான் அவனை நான் ஆட்டிப்படைக் கின்றேன் எனக்கூறி விட்டு, உனக்கு மூன்று விஷயங்களை நான் எச்சரிக்கை செய்கின்றேன். அவைகளில் ஒன்று உனக்கு ஹறாமாக்கப்பட்ட எந்தப் பெண்ணுடனும் நீ தனிமையில் இருக் காதே! ஏனெனில் அவ்வாறு ஒரு மனிதன் தனக்கு ஹறாமாக் கப்பட்ட பெண்ணுடன் தனிமையிலிருக்கும்போது எனது

தோழர் களின் உதவியின்றியே நான் மட்டும் அவனுடனிருந்து அவனை வழிகெடுத்து விடுகின்றேன் எனக்கூறினான் எனக் கூறுகின்றார்கள்.

**திருமணம் செய்தல்.**

குறிப்பாக திருமணம் செய்து கொள்வது மனிதனை ஷைத்தானுடைய தீங்குகளிலிருந்து பாதுகாப்பதுடன், அவனை விபச்சாரத்தில் ஈடுபடுவதை விட்டும் பாதுகாக்கின்றது. அத னால்தான் நபி (ஸல்) அவர்கள் இளைஞர்களை திருமணம் செய்யுமாறு வலியுறுத்தியிருக்கின்றார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், ஏ இளைஞர் சமுதாயமே! உங்களில் யாருக்கு உணவளிக்கும் சக்தியிருந்து, உடம்பில் தெம்பும் இருக்கின் றதோ அவர் திருமணம் செய்து கொள்ளட்டும். அவ்வாறு திரு மணம் செய்வது தனது பார்வையை தாழ்த்திக் கொள் வதற்கும், தனது கற்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உத வியாயிருக்கும். யாருக்கு அவ்வாறு உணவளிக்கும் சக்தியும், உடம்பில் தெம்புமில்லையோ அவர் நோன்பு நோற்றுக் கொள் ளட்டும். அது அவருக்கு கேடயமாயிருக்கும் எனக்கூறு கின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நபி (ஸல்) அவர் கள் ஒரு அழகான பெண்ணைக் கண்டார்கள். அவளிலே ஒருவித மோகம் வந்தது. உடனே சைனப் (ரலி) அவர்களிடம் வந்து தனது ஆசையை தீர்த்துக் கொண்டதன்பின் பின்வரு மாறு கூறினார்கள். நிச்சயமாக ஒரு பெண் வரும் போதும், திரும்பிப் போகும் போதும் ஷைத்தானுடைய தோற்றத்திலே வந்து போகின்றாள். எனவே உங்களில் ஒருவர் ஒரு பெண் ணைக் கண்டு அவளிலே ஆசையும் கொண்டு விட்டால், உடனே உங்கள் மனைவியிடம் வந்து உங்களது ஆசையை தீர்த்துக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்து கொள்வதின்மூலம் உங்கள் உள்ளத்தில் தோன்றிய அந்தத்தீய எண்ணம் உங்களை விட்டும் விலகிவிடும் என்றார்கள் எனக்கூறுகின்றார்(முஸ்லிம்).

**ஷைத்தானுக்கு மாறுசெய்தல்.**

ஷைத்தானுக்கு மாறு செய்வதென்பது அவனுக்கு நாம் விரோதிகள் என்பதை வெளிப்படையாகக் காட்டுவதாகும். அல் லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு விரோ தியாக இருக்கின்றான். ஆகவே அவனை நீங்களும் விரோதி யாகவே எடுத்துக் கொள்ளுங்கள். அவன் (தனக்கு வழிப்பட்ட) தன் கூட்டத்தாரை அழைப்பதெல்லாம், அவர்கள் கொழுந்து விட்டெரியும் நரகவாசிகளில் ஆகிவிடுவதற்காகவேதான்(35.6). அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் ஷைத்தானுக்கு எவ்வாறு மாறு செய்ய வேண்டும்? என சில வழிமுறைகளைக் கற்றுத் தந்துள்ளார்கள். அவைகளில் சிலதைப் பார்ப்போம்.

**வலது கையால் சாப்பிடுதல்.**

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், உங்களில் எவரும் இடது கையால் சாப்பிடவோ, குடிக்கவோ வேண்டாம். ஏனெனில் ஷைத்தான் இடது கையால் சாப்பிட்டு, அதனாலேயே குடிக்கின்றான் எனக் கூறுகின்றார்கள்(முஸ்லிம்).

**பகலில் சற்று நேரம் உறங்குதல்.**

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நீங்கள் பகலில் சற்று உறங்கிக் கொள்ளுங்கள். ஏனெனில் ஷைத்தான் பகலில் உறங்க மாட்டான்(தபறானி).

**வீண் விரயம் செய்வதை தவிர்த்தல்.**

அல்லாஹுத்தஆலா வீண்விரயம் செய்வதைத் தடுத்து அவ்வாறு வீண்விரயம் செய்பவர்களை ஷைத்தானின் தோழர் கள் எனக்கூறுகின்றான். (செல்வத்தை) அளவு கடந்து வீண் விரயம் செய்யாதுமிருப்பீராக! நிச்சயமாக வீண்விரயம் செய் வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர். ஷைத் தானோ தன் இரட்சகனுக்கு நன்றி செலுத்தா(து மாறு செய்) தவனாக இருக்கின்றான்(17.26-27). மேலும் நபி (ஸல்) அவர்

கள் வீண்விரயம் செய்வதை எச்சரித்துக் கூறுகையில், மனிதன் படுக்கும் விரிப்புக்களில் ஒன்று அவனுக்கும், இரண்டாவது அவனது மனைவிக்கும், மூன்றாவது அவனது விருந்தாளிக் கும், நான்காவது ஷைத்தானுக்குமாகும் எனக்கூறுகின்றார்கள் (முஸ்லிம்).

**வேலைகளை நிதானமாய்ச் செய்தல்.**

எப்போதும் அவசரம் ஷைத்தானின் பண்புகளிலுள்ளதால், நமது காரியங்களை நிதானமாகச் செய்யுமாறு நபி (ஸல்) அவர் கள் நமக்கு வலியுறுத்தியுள்ளார்கள். அதனைப்பற்றி அவர்கள் கூறுகையில், நிதானம் அல்லாஹ்விடத்திலும், அவசரம் ஷைத் தானிடத்திலும் உள்ளதாகும் எனக்கூறுகின்றார்கள்(பைஹகி).

**கொட்டாவியைத் தடுத்துக் கொள்ளல்.**

மனிதன் எப்போதும் கொட்டாவி விட்டுக் கொண்டிருப்ப தையே ஷைத்தான் விரும்புவான். ஏனெனில் அவ்வாறு கொட் டாவி விடுவதன்மூலம் மனிதனுக்கு சோம்பல் ஏற்படுகின்றது. அதனால்தான் கொட்டாவி விடுவதை முடியுமான அளவு தடுத் துக் கொள்ளுமாறு நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள் ளார்கள். நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், கொட்டாவி ஷைத்தானில் நின்று முள்ளதாகும். உங்களில் ஒருவர் கொட்டாவி விட்டால் முடியு மான அளவு அதனைத் தடுத்துக் கொள்ளவும். அவ்வாறு தடுக்காமல் வாயைப்பிழந்து ஹா எனக்கூறி கொட்டாவி விட்ட வனைப் பார்த்து ஷைத்தான் சிரிக்கின்றான் எனக்கூறுகின் றார்கள்(புகாரி,முஸ்லிம்).

ஷைத்தான் விரும்பக்கூடிய வார்த்தைகள், பெயர்கள் போன் றவைகளை நாம் பிரயோகிப்பதை விட்டும் தவிர்ந்து கொள் வது நம்மீது அவசியமாகின்றது. அவ்வாறு ஷைத்தான் விரும்பக் கூடிய வார்த்தைகளிலும், பெயர்களிலும் சிலதைப் பார்ப்போம்.

**இவ்வாறு செய்திருந்தால் இவ்வாறு நடந்திருக்குமே எனக் கூறாதிருத்தல்.**

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், சக்தி வாய்ந்த ஒரு இறை விசுவாசி பலவீனமான ஒரு இறைவிசுவாசியை விட சிறந்தவனாகும். உனக்கு ஏற்படும் அனைத்துக் காரியங்களிலும் நன்மைதான் இருந்து கொண்டிருக்கின்றது. உனக்கு பிறயோஜனமளிக்கும் காரியங்களில் நீ அல்லாஹ்விடம் உதவிதேடி அதனை சிரமமெடுத்துச் செய்துகொள். அதனை முடியாதென விட்டு விடாதே. உனக்கு ஒரு துன்பம் ஏற்பட்டு விட்டால், நான் இவ்வாறு செய்திருந்தால் இவ்வாறு நடந்திருக்குமே எனக்கூறாதே! மாறாக அல்லாஹ் ஏற்படுத்தியிருக்கின்றான். அதன்படி அவன் நாடியதைச் செய்து விட்டான் எனக்கூறிக்கொள். இவ்வாறு செய்திருந்தால் இவ்வாறு நடந்திருக்கும் என்ற வார்த்தை ஷைத்தானுடைய செயலிலுள்ளதாகும் எனக்கூறுகின்றார்கள் (முஸ்லிம்).

**ஷைத்தான் நாசமாய்ப் போவானாக எனக் கூறாதிருத்தல்.**

ஒரு நபித்தோழர் அறிவிக்கையில், நான் நபி (ஸல்) அவர்களுடன் வாகனத்தில் உட்கார்ந்திருந்த போது அவ்வாகனம் நம்மை குழுக்கி நிலைதடுமாற வைத்து விட்டது. உடனே நான் ஷைத்தான் நாசமாய்ப் போவானாக எனக்கூறினேன். அதைச் செவியுற்ற நபியவர்கள் அவ்வாறு கூறாதே! நீ அந்த வார்த்தையைக் கூறினால் அவன் வீட்டைப்போன்று பெருத்து, எனது சக்தியால் அவனை தள்ளிவிட்டேன் எனக்கூறி பெருமையடைகின்றான். மாறாக பிஸ்மில்லாஹ் எனக்கூறிக்கொள். அவ்வாறு நீ கூறினால் அவன் சிறு ஈயைப்போன்று சிறுத்து விடுகின்றான் என்றார்கள்(அஹ்மத்,அபூதாவுத்).

**அஜ்தஃ என்ற பெயரை சூட்டாமலிருத்தல்.**

மஸ்ருக் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நான் உமர் (ரலி) அவர்களை சந்திக்கச் சென்றபோது வந்திருப்பவர் யார்?

என வினவினார்கள். அதற்கு நான் அஜ்தஉடைய மகன் மஸ்ருக் எனக்கூறினேன். அதற்கவர்கள் அஜ்தஉ என்பது ஷைத்தான் என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறக்கேட்டுள்ளேன் என்றார்கள் எனக்கூறினார்கள்(அபூதாவுத்).

**ஷைத்தான் எப்போதும் பலவீனமானவனே!**

ஷைத்தானினது சூழ்ச்சிகள் அனைத்தும் பல வீனமானவை என்பதை நாம் அறிந்திருத்தல் வேண்டும். அவனது அனைத்துச் சூழ்ச்சிகளும் மிகவும் பலவீனமானவை என்பதை அல்லாஹ் இவ்வாறு கூறிக்காட்டுகின்றான். ஆகவே ஷைத்தானின் நண்பர்களுக்கு எதிராகப்போர் செய்யுங்கள். நிச்சயமாக ஷைத்தானுடைய சூழ்ச்சி மிகவும் பலவீனமானதாக இருக்கின்றது(4.76). மேலும் ஷைத்தான் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் விசுவாசிக்கும் உண்மையான நல்லடியார்களை எவ்வாறு பயப்படுகின்றான் என்பதை நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், நபி (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களிடம் ஏ உமரே! எனது உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன்மீது சத்தியமாக! நீ ஒரு பாதையில் சென்றால் ஷைத்தான் உனக்குப் பயந்து அப்பாதையால் செல்லாமல் வேறொரு பாதையால் செல்கின்றான் என்றார்கள்(முஸ்லிம்).

அடைக்கப்பட்ட வாயிலை திறக்க முடியாமலிருப்பதும் அவனுடைய இயலாமையிலுள்ளதாகும். அதனைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், அல்லாஹ்வின் பெயர்(பிஸ்மில்லாஹ்)கூறி கதவுகளை மூடிவிடுங்கள். அவ்வாறு மூடப்பட்ட கதவுகளை ஷைத்தானால் திறக்க முடியாது எனக்கூறுகின்றார்கள்(முஸ்லிம்).

**ஷைத்தானின் சூழ்ச்சிகளிலிருந்து பாதுகாப்பு.**

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், யார் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர் என ஒரு நாளைக்கு

நூறுமுறை ஓதிக்கொள்கின்றாரோ, அவருக்கு பத்து அடிமை களை உரிமையிட்ட நன்மை கொடுக்கப்படுகின்றது. அவரது நூறு பாவங்கள் அழிக்கப்படுகின்றது. நூறு நன்மைகள் எழுதப்படுகின்றது. அன்றைய தினம் அந்தி சாயும்வரை அவர் ஷைத்தானின் தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்படுகின்றார். மேற் கூறப்பட்டவைகளைவிட அதிக நற்கிரியைகளில் ஈடுபட்டு அதிக நன்மைகளை சம்பாதித்துக் கொண்டாலே தவிர அவர் செய்ததைவிட சிறந்தவொன்றை வேறுயாரும் செய்திருக்க மாட் டார்கள் எனக்கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

**பிரார்த்தனை.**

நாம் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கும் பிரார்த்தனை ஷைத் தானை விரட்டி அவனை தூரமாக்கும் காரணிகளில் மிகவும் முக்கியமானதாகும். அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் ஷைத் தானின் தீங்குகளை விட்டும் பாதுகாக்குமாறு அல்லாஹ்விடம் தினமும் பிரார்த்திப்பார்கள். அபுல் அஸ்ஹர் அல்அன்மாரி (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நபி (ஸல்) அவர்கள் இரவில் தூங் கச் செல்லும்போது பிஸ்மில்லாஹி வல.:.து ஜன்பீ, அல்லாஹும் மக்பிர்லீ தன்பீ, அவக்ஸி.:. ஷைத்தானீ, வபுக்க ருஹானீ, வஜ் அல்னீ பின்னதிய்யில் அ.:.லா எனக்கூறிக் கொள்வார்கள் எனக் கூறுகின்றார்கள்(அபூதாவுத்).

**தனிமையில் பிரயாணம்.**

ஷைத்தான் தனிமனிதனை வழிகெடுக்கவே எப்போதும் முயன்று கொண்டிருப்பான். அதிலும் ஒருவன் தனது மனை வியைவிட்டு, ஊரைவிட்டு தூரமாகி பிரயாணம் செய்யும்போது கெட்டவைகளையும், வெறுக்கத்தக்கவைகளையும் அழகுறக் காட்டி அவனை வழிகெடுப்பதில் மிகவும் மும்முரமாக ஈடுபடு வான். அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், தனி மையில் பிரயாணம் செய்பவன் ஷைத்தானாகும். பிரயாணம் செய்யும் இருவர் இரு ஷைத்தான்களாகும். பிரயாணம் செய்யும் மூவர் பிரயாணிகளாகும் எனக் கூறினார்கள்(அஹ்மத்).

கூட்டமாக பிரயாணம் செய்பவர்கள் ஒரு இடத்தில் உறங் கவோ, களைப்பாரவோ அல்லது தங்கவோ நேரிட்டால் பிரிந்து விடாமல் இருக்கும்படி நபி (ஸல்) அவர்கள் நமக்கு உபதே சித்துள்ளார்கள். அபூ ஸஃலபா அல்கஷனி (ரலி) அவர்கள் அறி விக்கையில், பிரயாணம் செய்யும் பிரயாணிகள் ஏதோவொரு இடத்தில் களைப்பாற இறங்கிவிட்டால் ஓடைகள் பக்கமாக பிரிந்து சென்று விடுவார்கள். அவ்வாறு பிரிந்து செல்வதைக் கண்ணுற்ற நபியவர்கள் இவ்வாறு இந்த இடங்களில் நீங்கள் பிரிந்து சென்றது ஷைத்தானின் செயலிலுள்ளதாகும் எனக்கூறி னார்கள் என்றார்கள். மீண்டும் அபூஸஃலபா அவர்கள் கூறுகின் றார்கள். நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறியதிலிருந்து பிரயாணிகள் எந்த இடத்தில் இறங்கினாலும், அவர்கள் அனை வரும் கூட்டமாகவே இருந்து கொள்வார்கள். எந்தளவுக்கென் றால் அவர்கள்மேல் ஒரு துணியை விரித்தால் அனைவரையும் மூடிக்கொள்ளும் அளவுக்கு நெருக்கமாக இருப்பார்கள் என்றார்கள்(அபூதாவுத்).

அன்பார்ந்த சகோதரர்களே!

நபி (ஸல்) அவர்கள் ஒரு விஷயத்தைக் கூறும்போது அவர்களோடு வாழ்ந்து வந்த உத்தமத் தோழர்கள் அதனை எவ்வாறு தங்களது வாழ்வில் கடைபிடித்து நடந்தார்கள் என் பதைப்பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டி ருக்கின்றோம். ஏனெனில் நாம் அவர்களது நடைமுறைகளை யும், அவர்கள் நபி (ஸல்) அவர்களுடன் எவ்வாறு இருந்து வந்தார்கள்? என்பதையும் அறிந்து கொள்ளும்போது நிச்சய மாக அவர்களது சிறப்பையும், நம்மைவிட அவர்கள் எவ்வ ளவு மேம்பட்டவர்கள் என்பதனையும் நாம் புரிந்து கொள்வோம்.

எனவே நாம் அனைவரும் இச்சிற்றேட்டிலே கூறப்பட்ட ஷைத்தானின் சூழ்ச்சிகளிலிருந்தும், இன்னும் இதிலே கூறப்

படாமல் வேறுவழிகளில் தெரிந்து வைத்திருக்கின்ற சூழ்ச்சிக ளிலிருந்தும் நம்மையும், நமது தாய் தந்தையர்களையும், சகோ தர சகோதரிகளையும், ஏனைய நண்பர்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் அவனது சூழ்ச்சிகளில் ஒன்று நம்மில் இருக்கக் கண்டால் அதனை உடனே விட்டு விலகி நம்மை நாமே பாதுகாத்து நாளை மறுமையில் இறைவிசுவாசி களுக்கென அல்லாஹ் தயார் செய்து வைத்திருக்கும் சுவ னத்தை அடைந்து கொள்ளக் கூடியவர்களாக நம்மை ஆக்கிய ருள எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவருக்கும் அருள் புரிவானாக!

وصلى الله تعالى وسلم على نبينا محمد وآله وصحبه وسلم.

– – அர்அர் – –

مطابع الحميضي
Al-HOMAIDHI PRESS - TEL : 4581000 - FAX : 4582217

# كيف تنجو

# من مكائد الشيطان؟

## ٣١ سببا شرعيا للوقاية من الشيطان

## باللغة التاميلية


تأليف

القسم العلمي بدار الوطن

ترجمة

محمد أنيس صلاح الدين

مراجعة

عبد العزيز شاجهان



# دار الورقات العلمية للنشر والتوزيع

Designed By : B.N.N 012673455

ردمك x-٥٣-٨٤٣-٩٩٦٠

...ارع الحميضي ت ٤٥٨١٠٠٠ ف ٤٥٩٢٢١٧ الرياض